# வீரபாண்டியன்

# தமிழ் வாசகம்

## (மூன்றும் புத்தகம்)

ஆசிரியர் :

இராசாம்பாள் கோவிந்தராசன், M. A., L. T.

தலைமை ஆசிரியை, லேடி. எம். ஸி. டி. பெண்கள்
உயர்நிலைப்பள்ளி, சென்னை.

பதிப்பாசிரியர்கள் :

வித்துவான் :

மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை

த. சே. உமாபதி, M. A., L. T.

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்

94-95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை—1.

1952

[விலை 0–8–0

காபிரைட்டு]

முதற்பதிப்பு—1952

வேங்கடேசன் அச்சகம் சென்னை—1.

## முகவுரை

**'வீரபாண்டியன் தமிழ் வாசகம்'** என்னும் மகுடம் புனைந்த வாசக வரிசையில் **இது மூன்றும் புத்தகம்.** இது ஆரம்பப் பாடசாலைகளுக்கு அரசியலார் வெளியிட்டுள்ள பாடத்திட்டத்தை முற்றிலும் தழுவி ஆக்கப் பெற்றுள்ளது.

இதில் பாடத்திட்டத்திற் குறிக்கப் பெற்றுள்ளபடி சுமார் 500 புதிய சொற்களைப் புகுத்தி எளிய இனிய நடையில் பாடங்கள் அமைக்கப் பெற்றுள்ளன. பாடங்கள் பலவகைப் பட்டவையாயினும், தமிழ் இலக்கியம், தமிழ்ப் புலவர் சம்பந்தமான பாடங்கள் சற்று அதிகமாகவே சேர்க்கப் பெற்றுள்ளன. குழந்தையுள்ளத்திற் பதியத்தக்க பாட்டுகள் பல இதன்கண் இடம் பெற்றுள்ளன. குழந்தைகள் மிக விரும்பும் சித்திரங்கட்குக் குறைவில்லை. மொழிப் பயிற்சிக்குரிய பலவகைப் பயிற்சிகள் தரப்பட்டுள்ளன. ஆனால், இவை மாதிரிகளேயன்றி, முடிவானவையன்று.

சுருங்கக் கூற வேண்டுமாயின், இந்நூலின்கண் இடம் பெற்றுள்ள படங்களும், பாடங்களும், பாட்டுக்களும், பயிற்சிகளும் இளைஞர் உள்ளத்தில் இன்பமூட்டித் தமிழ் மொழியைக் குறைந்த கால அளவில் சிறந்த முறையில் கற்கத் துணை புரியுமென்பது ஒருதலை.

இந்நூலை எழுதுமாறு என்னை ஊக்குவித்த சென்னை **அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸாருக்கும்,** இந்நூல், அச்சாகுங்கால் மேற்பார்வை செய்து வேண்டிய திருத்தங்களைச் செய்து உதவிய மதிப்புக்குரிய நண்பர்கள் **திருவாளர், வித்துவான், மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை** அவர்கட்கும், திருவாளர் **த. சே. உமாபதி** அவர்கட்கும் எனது உளமார்ந்த நன்றி உரியதாகுக!

அறிஞர் உலகம் இதனை அன்புடன் ஏற்று ஆதரவு நல்கும் என்பது எனது நம்பிக்கை.

சென்னை,
14-10-52.

**இராசாம்பாள் கோவிந்தராசன்.**

# பொருளடக்கம்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | நமது நாட்டுக் கொடி | .... | 1 |
| 2. | பழக்கடை | ... | 2 |
| 3. | திருவிழா | ... | 4 |
| 4. | பாரதியார் | ... | 7 |
| 5. | ரோஜா | ... | 10 |
| 6. | சூரியன் | ... | 13 |
| 7. | சூரியன் | ... | 14 |
| 8. | கதைப்படம் | ... | 16 |
| 9. | கழுதையும் பஞ்சுப்பொதியும் | ... | 17 |
| 10. | ஆடும் பறவைகள் | ... | 20 |
| 11. | கிராம அதிகாரிகள் | ... | 24 |
| 12. | பள்ளிக்கூடத் தோட்டம் (உரையாடல்) | .... | 27 |
| 13. | வாதியும் நீதி வாதியும் | ... | 31 |
| 14. | காலத்தைக் கணக்கிடுதல் | .... | 33 |
| 15. | கடிகாரம் | ... | 36 |
| 16. | கோழி | ... | 37 |
| 17. | கதைப்படம் | ... | 40 |
| 18. | 'மூங்கில் இலை மேலே' | ... | 41 |
| 19. | எங்கள் ஊர்ச் சந்தை (உரையாடல்) | ... | 44 |
| 20. | தந்திரம் பலித்தது | ... | 48 |
| 21. | பசு | ... | 51 |
| 22. | உழவுத்தொழில் | ... | 54 |
| 23. | ஆதிகாலத்து மக்கள் | ... | 57 |
| 24. | யானை | ... | 61 |
| 25. | நரியின் தந்திரம் | ... | 65 |
| 26. | எது உயர்ந்த தொழில்? | ... | 68 |
| 27. | கைத்தொழில்கள் | ... | 72 |
| 28. | புகை வண்டி நிலையம் | ... | 73 |
| 29. | பனிநாட்டு மக்கள் | ... | 77 |
| 30. | கதைப்படம் | ... | 82 |
| 31. | பாலனும் பாலும் (உரையாடல்) | ... | 83 |
| 32. | நல்ல தீர்ப்பு | ... | 85 |
| 33. | நரியை ஏய்த்த சேவல் | ... | 88 |
| 34. | குறத்தி அருச்சுனனுக்குக் குறி உரைத்தல் | ... | 91 |
| 35. | ஆமையும் முயலும் (நாடகம்) | ... | 92 |



# 1. நமது நாட்டுக் கொடி

கொடிபறக்குது! கொடிபறக்குது!
கொடிபறக்குது பாரடா!

கோணல்அற்ற கோலில்எங்கள்
கொடிபறக்குது பாரடா!

மனம்உவந்து உயிர்கொடுத்த
மானம்உள்ள வீரர்கள்!

மட்டிலாத துன்பமுற்று
நட்டுவைத்த கொடியிது!

தனம்இழந்து கனம்இழந்து
தாழ்ந்துபோக நேரினும்

தாயின்மானம் ஆனஇந்தக்
கொடியைஎன்றும் தாங்குவோம்!

— ஆஸ்தான கவிஞர் நாமக்கல் வே. இராமலிங்கம் பிள்ளை



## 2. பழக்கடை

1. இது ஒரு பழக் கடையின் படம். கடையில் பல வகையான பழங்கள் இருக்கின்றன. அவை அழகாக அடுக்கப்பட்டிருக்கின்றன. சில தட்டுக்களில் மாம்பழங்கள் இருக்கின்றன. சில தட்டுக்களில் சாத்துக்குடிப் பழங்கள் உள்ளன. திராட்சைப் பழங்கள் குலை குலையாய் இருப்பதைப் பார். வாழைப் பழங்கள் சீப்புச் சீப்பாய் இருத்தலைக் கவனி. அன்னாசிப் பழங்கள் கயிறுகளில் தொங்குகின்றன.

2. பழம் விற்பவரைப் பார். அவர் அருகில், அவர் வேண்டுவதை எடுத்துக் கொடுக்க ஒருவன் இருக்கின்றான். கடையில் மூவர் நிற்கின்றனர். அவர்கள் பழம் வாங்குகின்றார்கள்.

3. கிராமங்களில் பழக்கடைகள் இரா; பட்டணங்களிலேதான் அவை இருக்கும். பழக்கடையில்

உள்ள எல்லா வகையான பழங்களும் ஒரே ஊரில் கிடைப்பனவல்ல. அவை வெவ்வேறு ஊர்களிலிருந்து தருவிக்கப்படும்.

4. பழங்கள் உடலுக்கு நல்லவை. ஆதலால், அவற்றை நாம் தினந்தோறும் சாப்பிடுவது நல்லது.

## பயிற்சி :

**1. விடை எழுது :—**

அ. பாடத்தில் குறிக்கப்பட்டுள்ள பழங்களின் பெயர்களை எழுது.

ஆ. உனது ஊரில் என்னென்ன பழங்கள் கிடைக்கும்?

இ. பழங்களை நாம் ஏன் தினந்தோறும் தின்ன வேண்டும்?

**2. எதிர்ச்சொற்கள் எழுது :—**

| | |
|---|---|
| பல வகை × | ஒன்று × |
| அழகாக × | இராது × |

**3. இதைத் தெரிந்துகொள் :—**

பழம்
கடை
தட்டு
கயிறு
கிராமம்
உடல்

இவை பொருள்களின் பெயர்கள்.
இவை பெயர்ச்சொற்கள்.

**மனப்பாடம் செய் :—**

**ஒன்றன் பெயரே பெயர்ச்சொல்**



# 3. திருவிழா

1. எங்கள் ஊர் திருக்கழுக்குன்றம். இது செங்கற்பட்டு ஜில்லாவில் இருக்கிறது. எங்கள் ஊரில் பெரிய சிவன் கோவில் இருக்கிறது. சித்திரை மாதத்தில் திருவிழா நடைபெறும். அதற்குப் பிரமோற்சவம் என்பது பெயர். அது பத்து நாட்கள் நடைபெறும்.

2. விழாத் தொடங்குவதற்கு முன் கோவிலுக்கு வெள்ளை அடிப்பர். சுற்று மதில்களுக்குக் காவியும் வெள்ளையும் பட்டையாகத் தீற்றுவர்; தோரணங்கள் கட்டுவர். கோவிலின் உள்ளேயும், கோபுரத்தின் முன் பக்கத்திலும் பெரிய பந்தல்கள் போடப்படும். அப்பந்தல்களுக்கு மாவிலையும், குருத்தோலைப் பூக்களும் கட்டுவது வழக்கம்.

3. திருவிழாத் தொடங்குவதற்கு இரண்டு மூன்று நாட்கள் முன்னமே பல வகையான கடைகள் அமைக்கப்படும். வளையற்கடைகள் வரிசை

வரிசையாய் இருக்கும். குங்குமம், மஞ்சள், தேங்காய், பழம், புஷ்பம் விற்கும் கடைகளைக் கணக்கிட இயலாது. பொம்மைக் கடைகள், பட்சணக் கடைகள், காப்பிக் கடைகள், சோடாக் கடைகள் எங்கும் இருக்கும்.

4. விழா நடைபெறும் பத்து நாட்களும் காலையிலும் இரவிலும் இறைவர் வீதி வலம் வருவர். விமானங்களிலும், வாகனங்களிலும் இறைவரை வைத்து, மிக அழகாக அலங்கரிப்பது வழக்கம்.

5. இறைவர் வீதி வலம் வரும்போது கூட்டம் மிக அதிகமாய் இருக்கும். சிலர், வேதம் ஓதுவர். சிலர், பஜனை செய்வர். பல வகை வாத்தியங்கள் வாசிக்கப்படும். இரவில் பாண வேடிக்கையும் நடைபெறும். இதைக் காண நெடுந்தொலைவிலிருந்து மக்கள் வருவார்கள்.

6. பத்து நாள் விழாவில் ஐந்தாம் நாள் நடைபெறுவது ரிஷபவாகன உற்சவம். இது இரவில் நடப்பது. ஏழாம் நாள் தேர் விழா நடைபெறும்.

7. தேர் மிக உயரமானது. அதற்கு அழகிய சீலைகளும், கொடிகளும் கட்டுவர். அதில் மணிகளை மாட்டிப் பதுமைகளை நிறுத்துவர். தேரை இழுக்க மிகப் பெரிய வடங்கள் உண்டு. ஆயிரக்கணக்கான மக்கள் அவ்வடங்களைப் பற்றி, இறைவர் பெயரைக் கூறி இழுப்பார்கள். அப்படிச் செய்வதில் மக்களின் ஒற்றுமை நன்றாகத் தெரியும். சாதி வித்தியாசம், மத வித்தியாசம் முதலியன இங்குத் தலை காட்டுவதே இல்லை. எல்லாரும் தேரை நிலைக்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பதிலேயே நினைவாய் இருப்பர்.

## பயிற்சி :

**1. விடை எழுது :—**

அ. திருக்கழுக்குன்றம் எந்த ஜில்லாவில் இருக்கிறது ?
ஆ. திருக்கழுக்குன்றத்தில் எவர் கோவில் இருக்கிறது ?
இ. பிரமோற்சவம் எத்தனை நாள் நடைபெறும் ?
ஈ. விழாக்களில் எவை முக்கியம் ?
உ. உனது ஊரில் என்ன கோவில்கள் உள்ளன ?
ஊ. எந்தக் கோவில் விழாச் சிறப்பானது ?

**2. ஒரே பொருள் உள்ள சொற்களை நேர்நேராக எழுது :—**

| | |
|---|---|
| ஊர் | விழா |
| இருக்கிறது | ஆரம்பிக்கும் |
| உற்சவம் | முடியாது |
| தொடங்கும் | உள்ளது |
| இயலாது | கிராமம் |
| இறைவர் | தொலைவு |
| தூரம் | கடவுள் |

**3. இதைக் கவனி :—**

(அ) இராமன் வந்தான். (ஆ) இராமன் சாப்பிட்டான்.
இந்த இரண்டையும் ஒன்றாகச் சேர்க்கலாம்.

**இராமன் வந்து சாப்பிட்டான்.**

**பயிற்சி—இவற்றை ஒன்று சேர் :—**

1. { அ. திருக்கழுக்குன்றம் ஓர் ஊர்
   ஆ. அது செங்கற்பட்டு ஜில்லாவில் இருக்கிறது.

2. { அ. இது பிரமோற்சவம்.
   ஆ. பத்து நாட்கள் நடக்கும்.

3. { அ. கடையில் தேங்காய் விற்கும்.
   ஆ. கடையில் பழம் விற்கும்.





## 4. பாரதியார்

ஓடி விளையாடு பாப்பா !—நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா !
கூடி விளையாடு பாப்பா !—ஒரு
குழந்தையை வையாதே பாப்பா !
காலை எழுந்தவுடன் படிப்பு,—பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு ;
மாலை முழுதும்விளை யாட்டு—என்று
வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா !

1. நீ இந்தப் பாட்டைப் படி. இதை நீ இரண்டாம் வகுப்பிலேயே படித்திருக்கிறாய் அல்லவா ? இது எவ்வளவு சுலபமாய் இருக்கிறது ! எவ்வளவு அழகாய் இருக்கிறது ! இதைப் பாடினால் உனக்கு இன்பம் உண்டாகிறது அல்லவா ? இம்

மாதிரியான அழகிய பாட்டைப் படிக்கும்போது, 'இதை எழுதியவர் யார்?' என்பதை நீ தெரிந்து கொள்வது நல்லது. இந்தப் பாட்டைப் பாடியவர் **பாரதியார்**. அவரது உருவப்படத்தை முன் பக்கத்தில் பார்.

2. பாரதியார் என்பது அவர் முழுப்பெயர் அன்று; அவரது பட்டப் பெயர். அவரது முழுப் பெயர் **சுப்பிரமணிய பாரதியார்** என்பது. பாரதியாரின் தந்தையார் பெயர் **சின்னசாமி ஐயர்**; தாயாரின் பெயர் **இலக்குமி அம்மாள்**.

3. பாரதியார் **எட்டையபுரத்தில்** பிறந்தார். நமது தமிழ் நாட்டின் தென்பக்கம் திருநெல்வேலி ஜில்லா இருக்கிறது. அங்கேதான் எட்டையபுரம் இருக்கிறது.

4. பாரதியார் சிறந்த தமிழ்ப் புலவர். 'புலவர்' என்னும் சொல்லுக்குச் 'சிறந்த அறிவு உடையவர்' என்பது பொருள். பாரதியார் நூற்றுக் கணக்கில் பாட்டுக்களைப் பாடினர். அப்பாட்டுக்கள் பல வகைப்படும். அவருக்குத் தமிழின்மீது அன்பு அதிகம். ஆதலால், அவர் தமிழைப் பற்றியும் பல பாட்டுக்களைப் பாடினர்.

5. நாம் வசிப்பது **பாரத தேசம்**. இதன் தென்பகுதி **தமிழ் நாடு**. இவற்றின்மீது நமக்குப் பற்று இருக்க வேண்டும். இவ்விதமான பற்று, பாரதியாரிடம் அதிகம் இருந்தது. ஆகையால், அவர் பாரத தேசத்தைப்பற்றிப் பல பாடல்களைப் பாடினர்; தமிழ் நாட்டைப்பற்றியும் பல பாட்டுக்களை இயற்றினர். இதனல், அவருக்குத் '**தேசிய கவிஞர்**' என்னும் பட்டம் வழங்கி வருகிறது.

6. நீ மேல் வகுப்புக்களில் பாரதியாரின் பாடல்களை எல்லாம் படிக்க வேண்டும். அவை எளியவை; பொருள் நிரம்பியவை. ஆதலால், அவைகளைத் தமிழ் படித்தவர் எல்லாரும் போற்றுகின்றனர்.

## பயிற்சி :

**1. விடை எழுது :—**

அ. பாரதியாரின் முழுப் பெயர் யாது?

ஆ. பாரதியாருடைய தாயார், தந்தையார் பெயர்கள் யாவை?

இ. பாரதியார் எங்கே பிறந்தார்?

ஈ. பாரதியாருக்குத் 'தேசிய கவிஞர்' என்னும் பட்டம் ஏன் வழங்கி வருகிறது?

உ. உனக்குத் தெரிந்த பாரதியார் பாடல் ஒன்றை எழுது.

**2. எதிர்ச்சொற்களை நேருக்கு நேர் எழுது :—**

| | |
|---|---|
| சுலபம் | கீழ் வகுப்பு |
| இன்பம் | இறந்தார் |
| அழகு | கெட்டது |
| நல்லது | விகாரம் |
| பிறந்தார் | துன்பம் |
| மேல் வகுப்பு | கஷ்டம் |

**3. கீழ் வருவதில் உள்ள பெயர்ச்சொற்களை எடுத்து எழுது:—**

பாரதியார் என்ற புலவர் எட்டையபுரத்தில் சின்னசாமி ஐயர் மைந்தராய்ப் பிறந்தார்.







# 5. ரோஜா

1. ரோஜா மலரை நீ பார்த்திருப்பாய். அது மிகவும் அழகானது. அதன் நிறம் நேர்த்தியானது; மணம் இன்பமானது. ரோஜா மலரின் உருவத்தைப் படத்தில் பார். அதன் இதழ்களின் அமைப்பைக் கவனி.

2. ரோஜா மித வெப்ப நாட்டுச் செடி. மித வெப்ப நாடுகளில் அது நன்றாய்ப் பயிராகும்; வெப்ப நாடுகளில் தக்க சாதனங்கள் இருந்தால் பயிராகும். ஆனால், மித வெப்பநாட்டு ரோஜா மலருக்கு மணம் அதிகம் இராது. மலர் மட்டும் பெரிதாயும் அழகாயும் காணப்படும். வெப்ப நாடுகளில் மணம் அதிகமாய் இருக்கும்; மலர் பெரிதாய் இராது.

3. ரோஜாச் செடியை நீ பார்த்திருக்கிறாயா? அதன் இலைகள் வேப்பிலை போன்ற உருவம் உடையவை; ஆனால், வேப்பிலை போல அவ்வளவு குறுகி இராமல், சிறிது அகலமாய் இருக்கும். ரோஜா மலர் அழகாய் இருந்தாலும், அதன் செடியில்

கூரிய முட்கள் உண்டு. சேற்றிலே தாமரை பிறப்பதுபோல, முட்செடியிலே ரோஜா மலர் தோன்றுகிறது.

4. ரோஜா நிறம் அம்மலருக்கே உரியது. ஆயினும், **சிவப்பு, மஞ்சள், வெண்மை, பச்சை** முதலிய நிறங்கள் உள்ள ரோஜா மலர்களும் உண்டு என்பது உனக்கு ஆச்சரியமாய் இருக்கும். ஆனால், இந்நிறங்களை உடைய ரோஜாமலர்கள் அருமையாகவே இருக்கும்.

5. ரோஜா மலர் நமக்குப் பல வகைகளில் பயன் படுகிறது. ரோஜா மலர்களை மாலையாகத் தொடுத்துத் திருமணம், திருவிழா முதலிய சிறந்த காலங்களில் உபயோகிக்கிறோம். நமது நாட்டுப் பெண்கள் ரோஜா மலரைத் தலையில் சூடிக்கொள்கிறார்கள்; மாலை கட்டி இறைவனுக்குச் சூட்டி இன்பம் அடைகிறார்கள்.

6. நமது நாட்டின் வடகோடியில் **காஷ்மீரம்** என்னும் நாடு இருக்கிறது. அங்கும், **பாரசீக** நாட்டிலும், வேறு சில மித வெப்ப நாடுகளிலும் ரோஜாத் தோட்டங்கள் மிகுதி. அத்தோட்டங்களில் கிடைக்கும் மலரிலிருந்து **பன்னீர், அத்தர்** என்னும் நறுமணப் பொருள்களை உற்பத்தி செய்கிறார்கள். அவற்றை விற்றுப் பணம் சம்பாதிக்கிறார்கள்.

**பயிற்சி :**

**1. விடை எழுது :—**

அ. ரோஜா எவ்வகை நாடுகளில் நன்றாய்ப் பயிராகிறது?

ஆ. ரோஜாச் செடியில் காணப்படும் விசேஷப் பொருள் யாது?

இ. மித வெப்ப நாட்டு ரோஜாவுக்கும் வெப்ப நாட்டு ரோஜாவுக்கும் என்ன வித்தியாசம்?

ஈ. ரோஜா மலரின் பயன்கள் யாவை?

2. **கோடுகளைத் தக்க சொற்களால் நிரப்பு :—**

**கூரிய, நிறம், மலரின், போல, நாடு, வகைகளில்.**

அ. ரோஜா———உருவத்தைப் பார்.

ஆ. அதன் இலை வேப்பிலை———இருக்கும்.

இ. ரோஜாச் செடியில்———முட்கள் உண்டு.

ஈ. ரோஜா———அம்மலருக்கே உரியது.

உ. ரோஜா பல———பயன்படுகிறது.

ஊ. காஷ்மீரம் ஒரு———

3. **இதைத் தெரிந்துகொள் :—**

**கலைமகள்** கல்வித் தெய்வம்.
**மணியன்** பாடம் படிக்கிறான்.
**பசு** நல்ல விலங்கு.
**ரோஜா** அழகிய மலர்.

கலைமகள்—கடவுள்
மணியன்—மனிதன் } இவர்கள் பகுத்தறிவு உள்ளவர்கள்.

பசு—விலங்கு
ரோஜா—மலர் } இவை பகுத்தறிவு இல்லாதவை.

பகுத்தறிவு பெற்றவர் **உயர்ந்த இனம்** அல்லது **உயர்திணை.**

பகுத்தறிவு பெறாத, உயிர் உள்ளனவும், உயிர் இல்லாதனவும் **உயர்வு அல்லாத இனம்** அல்லது **அஃறிணை.**

**மனப்பாடம் செய் :**

**திணை இரு வகை. அவை உயர்திணை, அஃறிணை.**



## 6. சூரியன்

(பாட்டு)

சூரியனே ! சூரியனே !
    தொல்உலகை ஈன்றவனே !
காரிருளை நீக்கிகுணக்
    கடலில்எழும் சூரியனே ! 1

இங்கேஎம் உலகிதனை
    இருள்விழுங்க விட்டுவிட்டு
எங்கேநீ தூங்குகிறாய்
    இரவெல்லாம் சூரியனே ? 2

காலையிலே அனற்குழம்பாய்க்
    காட்சிதனை அளித்திடுவாய் !
மாலையிலே பொன்னிறமாய்
    மறைந்திடுவாய் மேல்திசையில் ! 3

வெயில்பரப்பி மழைதருவாய்
    மேன்மையுற உயிர்களெலாம்.
வெயிலில்லா விடில்அந்தோ !
    விளங்குலகம் அழிந்திடுமே ! 4

—த. சே. உமாபதி

# 7. சூரியன்

1. நாம் தினந்தோறும் சூரியனைப் பார்க்கிறோம். அது உதிக்கும் நேரத்தைக் **காலை** என்றும், திசையைக் **கிழக்கு** என்றும் கூறுகிறோம். சூரியன் மறையும் நேரத்தை **மாலை** என்றும், திசையை **மேற்கு** என்றும் சொல்கிறோம்.

2. சூரியன் நமக்கு வெளிச்சத்தையும், வெப்பத்தையும் தருகிறது. தினந்தோறும் சூரியன் உதிக்காவிட்டால், நாம் இருளிலேதான் இருக்க நேரும். சூரிய வெப்பம் இல்லாவிட்டால், எந்த உயிரும் வாழ முடியாது.

3. சூரிய வெப்பத்தாலேதான் மழை உண்டாகிறது. மழை இல்லாவிட்டால் என்ன நேரும் என்பதை யோசித்துப் பார். மனிதர், விலங்கு, பறவை முதலிய எல்லா உயிர்களும் அழிந்துவிடும். இதனாலேதான் தை மாதத்தில் நாம் பொங்கலிட்டுச் சூரியனை வணங்குகிறோம்.

4. சூரியனால் நமக்கு வேறு எத்தனையோ நன்மைகள் உண்டு. சூரியனைக்கொண்டுதான் நாம் காலத்தைக் கணக்கிடுகிறோம். சூரியன் உதிக்கும் திசையைக்கொண்டு மற்றத்திசைகளை அறிகிறோம். சூரியனைப் பற்றி நீ மேல் வகுப்புக்களில் அதிகமாகத் தெரிந்துகொள்ள வேண்டும்.

**பயிற்சி :**

**1. விடை எழுது :—**

அ. சூரியன் உதிக்கும் நேரம் எது? மறையும் நேரம் எது?

ஆ. சூரியன் நமக்கு என்ன தருகிறது?

இ. சூரியன் இல்லாவிட்டால் என்ன நேரும்?

ஈ. சூரிய வெப்பம் இல்லாவிட்டால் என்ன நேரும்?

2. **இதைத் தெரிந்துகொள் :—**

உள்ளது வெண்மை பால் நிறம். } இந்த நான்கு சொற்கள் முடிந்த பொருளைத் தரவில்லை.

பால் வெண்மை நிறம் உள்ளது.

அந்த நான்கு சொற்களே முடிந்த பொருளைத் தருகின்றன. இம்மாதிரி பொருள் தரும் சொற்களின் கூட்டம் வாக்கியம்.

**மனப்பாடம் செய் :**

**சொற்கள் ஒன்றை ஒன்று தொடர்ந்து நின்று பொருள் தந்தால், வாக்கியம் எனப்படும்.**

3. **கீழ்வரும் சொற் கூட்டங்களை வாக்கியங்களாக்கு :—**

அ. காலை சூரியன் நேரம் உதிக்கும்.

ஆ. நேரும் மழை என்ன இல்லாவிட்டால்.

இ. பல சூரியனால் உண்டு நன்மைகள் நமக்கு.

ஈ. அறிகிறோம் சூரியனால் காலத்தை நாம்.

உ. கிழக்கு உதிக்கும் சூரியன் திசை.

ஊ. திசை சூரியன் மேற்கு மறையும்.



# 8. கதைப் படம்

குறிப்பு:—படத்தைப் பார்த்துக் கதையைச் சொல்லச் செய்தல்:





# 9. கழுதையும் பஞ்சுப் பொதியும்

1. செங்கற்பட்டு ஜில்லாவில் சேயூர் என்பது ஒரு கிராமம். அவ்வூரைச் சேர்ந்த் உப்பளம் ஒன்று உண்டு. உப்பு விளைவிக்கும் இடத்துக்கு உப்பளம் என்பது பெயர். சேயூரில் செட்டியார் ஒருவர் வசித்தார். அவர் பெயர் சேந்தனர் என்பது. அவர் உப்பு வணிகர்.

2. சேந்தனரிடம் ஒரு கழுதை இருந்தது. அவர் தினந்தோறும் அதன் முதுகில் உப்புப் பொதியை ஏற்றுவார்; அதை ஓட்டிச் சென்று அயல் ஊர்களில் உப்பை விற்பார். அந்த ஊர்களுக்குச் செல்லும் வழியில் ஒரு கால்வாய் உண்டு. அதில் நீர் குறைவாய் இருக்கும்.

3. ஒரு நாள் பெருமழை பெய்தது. கால்வாயில் நீர் அதிகம் ஓடியது. கழுதை கால்வாயைக் கடந்தது. அப்போது அதன்மீது இருந்த உப்புப் பொதிகள் நீரில் நனைந்தன. பொதிகளில் இருந்த உப்பில் ஒரு பகுதி கரைந்துவிட்டது. கழுதை கரை

ஏறிய போது பளுக் குறைந்திருக்கக் கண்டது; சந்தோஷம் அடைந்தது.

4. மறு நாள் மழை இல்லை. கால்வாயில் சிறிது நீரே ஓடிக்கொண்டிருந்தது. ஆயினும், கழுதை கால் சறுக்குவது போலப் பாசாங்கு செய்து கால்வாயில் விழுந்தது. இதனால், உப்புக் கரைந்தது; பளுக் குறைந்தது. அது கண்ட சேந்தனார், அதிக ஆத்திரம் கொண்டார்; கழுதை செய்த தந்திரத்துக்காக அதை நன்றாகத் தண்டிக்க நிச்சயித்தார்.

5. அவர் அடுத்த நாள் உப்புப் பொதிக்குப் பதில் பஞ்சுப் பொதியைக் கழுதையின்மேல் ஏற்றினார். கால்வாயைக் கடந்த போது கழுதை வழக்கம் போலத் தண்ணீரில் விழுந்தது. பஞ்சுப் பொதி நனைந்துவிட்டது. கழுதை எழுந்த போது பொதியின் பளு மிக அதிகமாய் இருந்தது. கழுதை பொதியைச் சுமந்து செல்ல முடியாமல், துன்பம் அடைந்-



தது. இதனால், கழுதைக்கு நல்ல புத்தி வந்தது. அன்று முதல் அது கால்வாயில் விழுந்து பொதியை நனைக்கும் வழக்கத்தை விட்டது.

## பயிற்சி :

1. **விடை எழுது :—**

அ. சேயூர் எந்த ஜில்லாவில் இருக்கிறது?

ஆ. 'உப்பளம்' என்பது என்ன?

இ. கழுதை செய்த தந்திரம் யாது?

ஈ. கழுதையைச் சேந்தனுர் எப்படித் தண்டித்தார்?

2. **பெயர்ச்சொற்களை எடுத்து எழுது :—**

சேயூரில் வசித்த சேந்தனுர் ஒரு கழுதை வளர்த்தார்.

3. **கீழ் வரும் சொற்களின் திணைகள் யாவை?**

சேந்தனுர், உப்பு, கழுதை.

4. **எதிர்ச்சொற்கள் எழுது :—**

| | |
|---|---|
| ஏற்றுவார் × | சிறிது × |
| நனைந்தன × | இன்பம் × |

5. **கீழ்வரும் சொற் கூட்டங்களை வாக்கியங்களாக எழுது :—**

அ. மிகவும் பிராணி கழுதை சாந்தமான.

ஆ. இருக்கும் கழுதையின் நிறமாய் சாம்பல் உடல்.

இ. சுமக்க கழுதை பொதி உதவும்.

ஈ. புல்லும் கழுதை தின்னும் தழையும்.

உ. கிராமங்களிலும் எல்லா காணப்படும் கழுதைகள்.

ஊ. இருக்கும் கழுதை வெறுப்பாக கேட்க கத்துவது.



# 10. ஆடும் பறவைகள்

1. பறக்கும் தன்மை உடையது பறவை. முட்டையிட்டு அடைகாத்துக் குஞ்சு பொறிக்கும் தன்மையும் பறவைக்கு உண்டு. பறவைகள் பல வகைப்படும். சில பறவைகள் மரக்கிளைகளிற் கூடு கட்டி வாழும். சில பறவைகள் மரப் பொந்துகளில் வசிக்கும். மற்றும் சில பறவைகள் பாறைப் பிளவு-களில் தங்கி வசிக்கும். வேறு சில பறவைகள் புதர்-களில் வாழும்.

2. இவ்வாறே, பறவைகளுள் சில நிலத்தில் மட்டும் வாழும்; சில நிலத்திலும் நீரிலும் வாழும்; சில மரத்திலேயே வாழும். கிளி, மரம் கொத்தி போன்றவை மரத்திலேயே வாழ்வன. இவை பெரும் பாலும் நிலத்தில் தங்குவது இல்லை. கோழி, கௌதாரி போன்றவை நிலத்திலேயே வாழ்வன. வாத்து, கொக்குப் போன்றவை நிலத்திலும் நீரிலும் வாழ்வன.

3. பறவைகளுள் சில பாடும் தன்மை உடையவை. குயில், செவிக்கு இனிமையாகக் கூவும். வானம்பாடி, பாடும். சில பறவைகள் நாம் சொல்லும் சொற்களையே திருப்பிச் சொல்லும். கிளியும், மைனாவும் அப்படிச் செய்பவை. சில பறவைகள் ஆட வல்லவை. **மயில், வான்கோழி, புறா** என்பவை ஆடும் பறவைகள். அவற்றின் உருவங்களைப் படத்தில் பார்.

4. மயில் மிகவும் அழகிய பறவை. அதன் உருவத்தைக் கவனித்துப் பார். அதன் வாலில் நீண்ட இறகுகள் உள்ளன. அவை **தோகை** எனப்படும். ஒவ்வொரு தோகையின் நுனியிலும் அழகிய புள்ளி ஒன்று உண்டு. அந்தப் புள்ளிகளுக்குக் **கண்கள்** என்பது பெயர். மயில், தான் விரும்பும் போது தோகையை விரித்து ஆடும். மேகத்தைக் கண்டால், மயிலுக்கு மகிழ்ச்சி உண்டாகும். ஆதலால், மழை காலத்தில் மயில் அடிக்கடி ஆடும். மயில் ஆடுவதைப் படத்தில் பார்.

5. ஆண் மயிலின் தலையில் கொண்டை உண்டு. பெண் மயிலுக்குக் கொண்டை இல்லை. அதற்கு நீண்ட தோகையும் இல்லை. ஆதலால், பெண் மயில் ஆடாது. ஆண் மயில் மட்டுமே ஆடும். மயிலின் இறகுகள் மிகவும் அழகானவை, அவற்றில் பச்சை, நீலம், மஞ்சள் ஆகிய நிறங்கள் காணப்படும்; பொன் நிறமும் பொருந்தி இருக்கும். மயிலின் உடல் பெரியது; சிறகுகள் சிறியவை. ஆதலால், அது வெகு தூரம் பறவாது. மயில் பார்ப்பதற்கு அழகாயிருந்தாலும், அதன் குரல் இனிமையாய் இராது. மயில் கூவுவதை **அகவுதல்** என்பர்.

6. படத்தில் மயிலைப் போலக் காணப்படும் பறவை வான்கோழி. அதன் வாலிலும் நீண்ட இறகுகள் உண்டு. ஆதலால், அதுவும் மயிலைப் போல ஆடும். வான்கோழியின் இறகுகளில் கருமை, வெண்மை என்னும் இரண்டு நிறங்களே காணப்படும். அதன் அலகின்மீது நீண்ட தோல் போன்ற ஓர் உறுப்புத் தொங்கும், ஆகையால், வான்கோழி காண்பதற்கு அழகாய் இராது. வான்கோழிகளிலும் ஆண் மட்டுமே ஆடும்; பெண் கோழி ஆடுவது இல்லை.

7. படத்தில் புறாவின் உருவத்தைப் பார். அதுவும் தனது வாலில் உள்ள இறகுகளை விரித்து ஆடும். ஆனால், அது அசைந்து அசைந்து ஆடுவது மிகவும் அழகாய் இருக்கும். எல்லாப் புறாக்களும் ஆடுவது இல்லை; அவற்றுள் ஒரு தனி இனம் மட்டுமே ஆடும். அவை **ஆட்டப் புறாக்கள்** எனப்படும்.

### பயிற்சி :

**1. விடை எழுது :—**

அ. பறவைக்கு அப்பெயர் வரக் காரணம் என்ன ?

ஆ. பறவைகள் எங்கெங்கு வசிக்கும் ?

இ. மரத்திலேயே வாழும் பறவைகள் எவை ?

ஈ. நிலத்திலேயே வாழும் பறவைகள் எவை ?

உ. நிலத்திலும் நீரிலும் வாழும் பறவைகள் எவை ?

ஊ. ஆடும் பறவைகள் எவை ?

எ 'தோகை' என்பது எதற்குப் பெயர் ?

ஏ. மயில் இறகில் காணப்படும் நிறங்கள் எவை ?

ஐ. 'அகவுதல்' என்பது எதற்குப் பெயர் ?

ஒ. மயிலைப் போல எப்பறவைகள் ஆடும் ?

2. **கீழ் வரும் எழுத்துத் தொகுதிகளைச் சொற்களாக்கு :—**

**துஉயடை—ன்தமை—ள்கவைறப—ரிதாகௌ—ழின்வாகோ —ண்கோடை**

3. **கீழே உள்ள இரண்டிரண்டு வாக்கியங்களை ஒவ்வொன்ருக்கி எழுது :—**

1. அ. பறவை முட்டை இடும்.
   ஆ. பறவை குஞ்சு பொறிக்கும்.
2. அ. கொக்கு நிலத்தில் வாழும்.
   ஆ. கொக்கு நீரில் வாழும்.
3. அ. மேகம் வரும்.
   ஆ. அதைக் கண்டு மயில் ஆடும்.

4. **கோட்டைத் தகுந்த சொல்லால் நிரப்பு :—**

அ. பறக்கும் தன்மை உள்ளது———. (பரவை, பறவை)

ஆ. மயிலின் குரல் ——— இராது. (அருவருப்பாக, இனிமையாக)

இ. ———கண்டால் மயில் ஆடும். (வெயிலை, மேகத்தை)

ஈ. இனிய குரல் உள்ள பறவை———. (கிளி, குயில்)

உ. ஆடும் பறவைகளுள் சிறியது———. (மயில், புரு)

ஊ. வான்கோழி அழகாய்———. (இருக்கும், இராது)



# 11. கிராம அதிகாரிகள்

1. உனது வகுப்பில் பலர் படிக்கின்றனர். அவர்களுக்குள் ஏதேனும் சச்சரவு நேர்ந்தால், அதைத் தீர்த்து வைப்பவர் யார்? குற்றம் செய்தவரைத் தண்டிப்பவர் யார்? உங்கள் ஆசிரியர். அவர் அதிகாரத்துக்கு மாணவர் அடங்கி நடக்க வேண்டும் அல்லவா? இது போல, ஒவ்வொரு கிராமத்திலும் மனிதர் பலர் வசிக்கின்றனர். அவர்களுக்குள் சச்சரவு ஏற்பட்டால், தீர்த்து வைக்க ஒருவர் வேண்டும். கிராம சம்பந்தமான வேறு அலுவல்களும் உண்டு. அவற்றையெல்லாம் கவனிக்கச் சிலர் வேண்டும். இவர்களே கிராம அதிகாரிகள்.

2. ஒவ்வொரு சிறு கிராமத்திலும் **மணியக்காரர், கணக்கப்பிள்ளை** என்னும் அதிகாரிகள் இருப்பார்கள். இவர்களுள் மணியக்காரர் கிராம

மக்கள் செய்யும் சிறு குற்றங்களை விசாரிப்பார்; குற்றம் செய்தவருக்கு அபராதம் விதிப்பார்; பெரிய குற்றங்களை மேல் அதிகாரிகளுக்குத் தெரிவிப்பார்: குடிகள் அரசாங்கத்தாருக்குக் கட்ட வேண்டிய நிலவரியை வசூல் செய்வார்; வசூலித்த பணத்தை அரசாங்க நிதிக்கு அனுப்புவார்; கிராமத்தில் நேரும் பிறப்பு இறப்புக்களைக் குறித்து வைப்பார்.

3. கிராமத்தில் உள்ள நிலங்களின் அளவுகள் எல்லாம் கணக்கப் பிள்ளையிடம் இருக்கும். நில அளவு காரணமாகக் குடிகள் சண்டையிட்டுக் கொண்டால், நிலங்களை அளந்து ஒழுங்குபடுத்துபவர் கணக்கப்பிள்ளை. இவர் வரிப்பணம் தர வேண்டுபவர் இன்னார் என்பதை மணியக்காரருக்கு அறிவிப்பார்; தண்டல் செய்த பணத்தின் கணக்குகளைப் பதிவு செய்துகொள்வார். நிலங்களை அளப்பதற்கு இவரிடம் பெரிய சங்கிலியும், நீண்ட கோலும் இருக்கும். அவற்ருல் இவர் நிலங்களை அளப்பார்.

4. **தலையாரி, வெட்டியான்** என்பவர் கிராம அலுவலாளர். கிராமத்தைப் பாதுகாப்பது தலையாரியின் வேலை. வரிப்பணத்தைக் கொண்டுபோய் அரசாங்க நிதியில் செலுத்துவதும், கிராம மக்களுக்கு மணியக்காரர் சொல்லும் செய்தியைத் தண்டோரா போட்டுத் தெரிவிப்பதும் வெட்டியானுடைய வேலைகள்.

5. கிராம அதிகாரிகளும், கிராம அலுவலாளர்களும் அரசாங்கத்தாரால் அமர்த்தப்படுகிருர்கள்.

ஆதலால், அவர்களுக்கு மாதந்தோறும் அரசாங்கமே சம்பளம் தருகிறது.

## பயிற்சி :

**1. விடை எழுது :—**

அ. கிராம அதிகாரிகள் யார் ?

ஆ. கிராம அலுவலாளர் யார் ?

இ. மணியக்காரர் செய்யும் வேலைகள் எவை ?

ஈ. கணக்கப்பிள்ளையின் வேலைகள் என்ன ?

உ. வெட்டியான் செய்வது என்ன ?

ஊ. தலையாரியின் வேலை யாது ?

**2. கீழ் வரும் சொல் வரிசைகளை வாக்கியங்களாக்கு :—**

அ. வகுப்பில் படிக்கிறேன் நான் மூன்ரும்.

ஆ. பள்ளியில் எங்கள் இருக்கின்றன வகுப்புக்கள் ஐந்து.

இ. ஆசிரியர் மிகவும் எங்கள் அன்பாக எங்களிடம் இருக்கிருர்.

**3. இதைத் தெரிந்துகொள் :—**

பெண்—இது ஒருத்தியைக் குறிக்கும் பெயர்.
பெண்கள்—இது ஒருத்திக்கு மேற்பட்ட பலரைக் குறிக்கும் பெயர்.
பசு—ஒன்றைக் குறிக்கும் பெயர்.
பசுக்கள்—பலவற்றைக் குறிக்கும் பெயர்.

**மனப்பாடம் செய் :**

**ஒன்றைக் குறிக்கும் பெயர் ஒருமைப் பெயர். ஒன்றுக்கு அதிகமானவற்றைக் குறிக்கும் பெயர் பன்மைப் பெயர். ஒருமை பன்மை என்பன எண் எனப்படும்.**



## 12. பள்ளிக்கூடத் தோட்டம்

(உரையாடல்)

**கண்ணம்மாள் :** இராசம், எங்கள் பள்ளித்தோட்டத்தைப் பார்க்கலாம் வருகிறாயா ?

**இராசம் :** ஓ ! வருகிறேன். எனக்குத் தோட்டங்களைப் பார்க்கவும், அவற்றில் விளையாடவும் விருப்பம் அதிகம்.

**கண் :** இதோ ! தோட்டத்தின் உள்ளே வந்து விட்டோம்! இது எவ்வளவு விசாலமாய்இருக்கிறது பார் ! இதில் எத்தனை வகைச் செடிகள் இருக்கின்றன தெரியுமா !

**இரா :** முதலில் பூஞ்செடிகளைப் பார்க்கலாம்.

**கண் :** நல்லது. இங்கே பார். இவை மல்லிகைச் செடிகள். இம்மாதம் பங்குனி மாதம். இப்போதுதான் இவை பூக்க ஆரம்பிக்கின்றன. சித்திரை, வைகாசி மாதங்களில் மல்லிகை

அதிகமாகப் பூக்கும். செடிகளில் அரும்புகள் இருப்பதைக் கவனி. அவை கொத்துக் கொத்தாய் இருக்கின்றன. அவை மாலையில் மலரும். அப்போது அவற்றின் மணம் தோட்டத்தையே சூழ்ந்துகொள்ளும்.

**இரா:** அதோ! கொடியாகப் படர்ந்திருக்கும் செடி என்ன செடி? அதை நான் பார்த்ததே இல்லை.

**கண்:** அதுவா? அது மனோரஞ்சிதச் செடி.

**இரா:** அதிற்பூக்கள் இல்லையோ?

**கண்:** இல்லாமல் என்ன? அதன் பூக்களைத் தூரத்திற் காண முடியாது. பூக்கள் பச்சை நிறமாய் இருக்கும். அவை இலைகளில் மறைந்து இருக்கும். வா, அருகிற்சென்று பார்ப்போம்.

**இரா:** ஆஹா! இதோ ஒரு பூ இருக்கிறது! இது நீ சொன்னதுபோலப் பச்சை நிறமாய் இல்லையே!

**கண்:** ஆம். அது நன்றாய் மலர்ந்துவிட்டது. ஆதலால், சற்று மஞ்சள் நிறமாய் இருக்கிறது. நன்றாக மலராதவை பச்சையாய்க் காணப்படும். அதைப் பறித்து மோந்து பார்.

**இரா:** ஆஹா! என்ன மணம்! இவ்வளவு மணம் உள்ள பூவை நான் கண்டதே இல்லை. தலையில் சூடிக்கொள்ள இது ஒன்றே போதும்.

**கண்:** இந்தக் கொடியைப் பார். இதில் கொத்துக் கொத்தாய்ப் பூக்கள் இருக்கின்றன. இவை என்ன தெரியுமா?

**இரா :** ஓ! நன்ருய்த் தெரியும். இவை கொடி சம்பங்கி. இவை மிகச் சிறியவை. ஆயினும், இவற்றில் மணம் அதிகம். இவைகளும் நன்ருய் முதிர்ந்தால், அடிப்பாகம் பசுமையாகவும், இதழ்ப்பாகம் மஞ்சளாகவும் இருக்கும்.

**கண் :** இராசம், இந்தச் செடியின் மலரைப் பார்.

**இரா :** இது என்ன பூ? மல்லிகை போல இருக்கிறது. ஆனல், ஓர் அங்குலத்துக்குமேல் நீளமாய் இருக்கிறதே!

**கண் :** நீ சொல்வது உண்மைதான். இது மல்லிகை வகையைச் சேர்ந்ததே. இதற்கு மன்மத பாணம் என்பது பெயர். இது மலர்ந்தால், மணம் அதிகமாக வீசும்.

**இரா :** அங்கே குட்டையாய் உள்ளவை என்ன செடிகள்? அவற்றில் மலரே இல்லையே!

**கண் :** அவையா? அவை பூக்கும் செடிகள் அல்ல. அவைதாம் மருவு, மருக்கொழுந்து என்பவை. அவை பூவாச் செடிகள். அவற்றின் இலைகளே நறுமணம் வீசும். அவற்றை நாம் தலையிற் சூடிக்கொள்ளலாம்.

**இரா :** நல்லது. அங்கே காணப்படும் செடிகள் யாவை?

**கண் :** அவையா? அவைதாம் செவ்வந்திச் செடிகள். அவை சாமந்தி என்றும் கூறப்படும். அவற்றில் உள்ள பூக்களைப் பார். அவை மணம் உடையவை அல்ல; ஆனல், பெரியவை. அவை மஞ்சள், வெண்மை என இரு வகைப்படும்.

இரா: கண்ணம்மா, அத்தனை பூக்களைப் பார்த்தோமே, அவை எல்லாம் இந்த ரோஜாவைப் போல அழகாய் இல்லை பார்த்தாயா! மலர்களுள் ரோஜாவே அழகு மிகுந்தது. ஓ! உங்கள் தோட்டத்தில் வெண்மை, சிவப்பு, மஞ்சள் நிற ரோஜாக்களும் இருக்கின்றனவே!

கண்: வேண்டுமானால் நீ விரும்பும் இரண்டொரு மலர்களைப் பறித்துக்கொள். வீட்டுக்குப்போகலாம். எனக்கு வயிறு பசிக்கிறது. நாளை வந்து பழத்தோட்டத்தைப் பார்வையிடலாம்.

பயிற்சி:

1. விடை எழுது:—

அ. மல்லிகைப் பூவின் நிறம் என்ன?
ஆ. செவ்வந்திப் பூவுக்கு வழங்கும் வேறு பெயர் யாது?
இ. மலர்களுள் மிகவும் அழகுள்ளது எது?
ஈ. பூக்களுள் மிகவும் சிறியது எது?
உ. மனோரஞ்சிதத்தின் நிறம் யாது?
ஊ. வெண்மை, சிவப்பு, மஞ்சள் நிறமுள்ள மலர்கள் வகைக்கு இரண்டு எழுது.

2. எதிர்ச்சொற்களை நேருக்கு நேர் எழுது:—

ஆரம்பி, மாலை, இல்லை, நீளம், குட்டை.
உண்டு, காலை, முடி, உயரம், அகலம்.

3. தகுந்த சொல்லால் கோட்டை நிரப்பு:—

அ. செடிகள் வளர்க்கப்படும் இடத்துக்கு —— என்பது பெயர். (தோப்பு, வயல், தோட்டம்)

ஆ. ரோஜா மலர் மிகவும் ——. (பெரியது, அகன்றது, அழகியது)

இ. ரோஜாச் செடியில் —— உண்டு. (இலை, முள், கிளை)

ஈ. கொடிசம்பங்கிப்பூ மிகவும் ——. (நீண்டது, அழகியது, சிறியது)

## 13. வாதியும் நீதி வாதியும்

1. காஞ்சீபுரத்தில் கசாப்புக்காரன் ஒருவன் இருந்தான். **எல்லன்** என்பது அவன் பெயர். கசாப்புக்காரன் என்பதற்கு '**மாமிசம் விற்பவன்**' என்பது பொருள். அதே பட்டணத்தில் நீதிவாதி ஒருவர் இருந்தார். அவர் பெயர் **நீலமேகம் பிள்ளை** என்பது. சட்டம் படித்தவரை **நீதி வாதி** என்று கூறுவது வழக்கம்.

2. ஒரு நாள் எல்லன் நீலமேகம் பிள்ளை வீட்டுக்குச் சென்முன். அவன் அவரைக் கண்டு, "ஐயா, வணக்கம்!" என்முன்.

***நீலமேகம் பிள்ளை* :** வா, அப்பா; இந்த நாற்காலியில் இரு. உனக்கு என்ன உதவி வேண்டும்?

**எல்லன் :** ஐயா, நான் ஒரு வழக்குச் சம்பந்தமாக ஆலோசனை கேட்க வந்தேன். இன்று காலையில் எனது மாமிசக்கடைக்கு ஒரு நாய் வந்தது; கடையில் இருந்த ஒரு பெரிய மாமிசத் துண்டைத் தூக்கிக்கொண்டு ஓடிவிட்டது. அதற்கு என்ன செய்யலாம்?

***நீல:*** என்ன செய்வது! நாயின் சொந்தக்காரரைக் கண்டு பிடிக்க வேண்டும். அவரிடம் சென்று மாமிசத்தின் விலையைத் தரும்படி கேட்க வேண்டும்.

**எல் :** சரி; அந்த நாய் உம்முடையதுதான்.

***நீல :*** அப்படியா! நீ கவலைப்பட வேண்டா. மாமிசத்தின் விலை என்ன? சொல். இதோ தருகிறேன்.

எல்: மாமிசத்தின் விலை இரண்டு ரூபா.

நீல: இதோ இரண்டு ரூபா. பெற்றுக்கொள்.

3. இரண்டு ரூபாவைப் பெற்றுக்கொண்டு எல்லன் புறப்பட்டான். உடனே நீலமேகம் பிள்ளை அவனை நிறுத்தினார். "மாமிசத்தின் விலையை நீ பெற்றுக்கொண்டாய். ஆனால், நீதிவாதியாகிய நான் உனக்குக் கூறிய ஆலோசனைக்குக்கட்டணம்செலுத்தாமல் போகலாமா? எனது கட்டணம் ஐந்து ரூபா," என்றார்.

4. அது கேட்ட எல்லன் முகம் வாட்டம் அடைந்தது; சந்தோஷம் மறைந்தது; அவன் ஒன்றும் பேசாமல் ஐந்து ரூபாவை நீலமேகம் பிள்ளைக்குக் கொடுத்துவிட்டு வெளியே சென்றான்.

### பயிற்சி :

**1. விடை எழுது :—**

அ. எல்லன் எங்கு வாழ்ந்தான் ?

ஆ. நீலமேகம் பிள்ளையின் ஊர் எது ?

இ. எல்லன் என்ன தொழில் செய்து வந்தான் ?

ஈ. நீலமேகம் பிள்ளையின் தொழில் யாது?

உ. கசாப்புக்காரன், நீதி வாதி—பொருள் எழுது.

**2. கோடுகளைத் தகுந்த சொற்களால் நிரப்பு :—**

அ. எல்லன் நீலமேகம் பிள்ளையை———எண்ணினான். (காண, ஏமாற்ற, தூஷிக்க)

ஆ. நீலமேகம் பிள்ளை எல்லனை————விட்டார். (அனுப்பி, துரத்தி, ஏமாற்றி)

இ. எல்லன் ———சம்பந்தமாக நீதி வாதி வீட்டுக்குச் சென்றான். (படிப்பு, வழக்கு, சண்டை)

**3. எதிர்ச்சொற்கள் எழுது :—**

படித்தவர் × மறைந்தது ×

கவலை × வெளியே ×




## 14. காலத்தைக் கணக்கிடுதல்

1. ஒரு பகலும், ஓர் இரவும் கொண்டது ஒரு நாள். முன்காலத்தில் ஒரு நாளை அறுபது நாழிகைகளாகப் பிரித்திருந்தார்கள்; சூரியனது இயக்கத்தைக்கொண்டு பகலில் நாழிகையைக்கணக்கிட்டார்கள். இரவில் நட்சத்திரங்களைப் பார்த்து நாழிகை கணக்கிடப்பட்டது.

2. இக்காலத்தில் ஒரு நாளை இருபத்து நான்கு மணிகளாகப் பிரித்துக் கணக்கிடுகிறோம். அறுபது விநாடிகள் கொண்டது ஒரு நிமிஷம். அறுபது நிமிஷங்கள் கொண்டது ஒரு மணி. இம்மணிக் கணக்கை நாம் கடிகாரத்தின் உதவியால் அறிகிறோம்.

3. இருபத்து நான்கு மணி நேரம் கொண்டது ஒரு நாள். நாள் அல்லது கிழமை ஏழு கொண்டது ஒரு வாரம். இந்த ஏழு கிழமைகளுக்கும் **ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியா-**

மூன், வெள்ளி, சனி என்னும் பெயர்கள் வழங்குகின்றன. வாரத்தின் முதல் நாள் ஞாயிற்றுக் கிழமை என்பதை மறவாதே.

4. முப்பது நாட்கள் அல்லது நான்கு வாரங்கள் கொண்டது ஒரு **திங்கள்.** திங்களை **மாதம்** என்பதும் உண்டு. பன்னிரண்டு மாதங்கள் கொண்டது ஓர் **ஆண்டு.** ஆண்டு என்பதை **வருஷம்** என்றும் சொல்லுவது உண்டு. மேல் நாட்டு முறையின்படி எல்லா மாதங்களிலும் சரியாக முப்பது நாட்கள் இரா; சில மாதங்களில் முப்பது நாட்களும், சில மாதங்களில் முப்பத்தொரு நாட்களும் இருக்கும். இருபத்தெட்டு நாட்களுக்குக் குறைந்ததும், முப்பத்தொரு நாட்களுக்கு அதிகப்பட்டதுமான மாதம் எதுவும் இல்லை.

5. நமது நாட்டில் இரண்டு வகையான காலக் கணக்கு முறை உண்டு: ஒன்று, தமிழ் நாட்டு முறை; மற்றொன்று, மேல் நாட்டு முறை. நம் பள்ளிகளிலும், மற்ற இடங்களிலும் மேல் நாட்டு முறைப் படியே காலம் கணக்கிடப்படுகிறது. இக்காலக் கணக்கை நாம் அறிவதற்குக் **'காலண்டர்'** உபயோகமாகிறது. காலண்டரை நீ உனது வீட்டிலும், பள்ளியிலும் பார்க்கலாம். அது படத்திலும் தரப்பட்டுள்ளது. அதைக் கவனித்துப் பார். அதில் வருஷம், மாதம், கிழமை, தேதி என்பவை குறிக்கப் பட்டுள்ளன.

6. பின்னே, தமிழ் முறைப்படியும், ஆங்கிலக் கணக்கின்படியும் மாதங்களின் பெயர்கள் தரப் பட்டுள்ளன. அவற்றை மனப்பாடம் செய்:

| தமிழ் மாதம் | | ஆங்கில மாதம் | |
|---|---|---|---|
| 1 | சித்திரை | 1. | ஜனவரி |
| 2. | வைகாசி | 2. | பெப்ருவரி |
| 3. | ஆனி | 3. | மார்ச்சு |
| 4. | ஆடி | 4. | ஏப்பிரில் |
| 5. | ஆவணி | 5. | மே |
| 6. | புரட்டாசி | 6. | ஜூன் |
| 7. | ஐப்பசி | 7. | ஜூலை |
| 8. | கார்த்திகை | 8. | ஆகஸ்டு |
| 9. | மார்கழி | 9. | செப்டெம்பர் |
| 10. | தை | 10. | அக்டோபர் |
| 11. | மாசி | 11. | நவம்பர் |
| 12. | பங்குனி | 12: | டிசெம்பர் |

பயிற்சி :

**1. விடை எழுது :—**

அ. எத்தனை வினாடிகள் கொண்டது ஒரு நிமிஷம்?
ஆ. எத்தனை நிமிஷங்கள் கொண்டது ஒரு மணி?
இ. ஒரு நாள் எத்தனை மணி நேரம் கொண்டது?
ஈ. நாளுக்கு வழங்கும் வேறு பெயர் என்ன?
உ. மாதத்துக்கு வழங்கும் வேறு பெயர் யாது?
ஊ. எத்தனை மாதங்கள் கொண்டது ஒரு வருஷம்?
எ. காலண்டரில் உள்ள காலக் குறிப்புக்கள் எவை?

**2 எதிர்ச்சொற்கள் எழுது: —**

| | | | |
|---|---|---|---|
| முற்காலம் | × | இருக்கும் | × |
| பிரித்தல் | × | குறைந்த | × |
| முதல் | × | மேல் நாடு | × |

**3 ஒருமைக்குப் பன்மையும், பன்மைக்கு ஒருமையும் எழுது :—**

**நாள்—நாழிகைகள்—நட்சத்திரம்—மணிகள்—நிமிஷங்கள் — வினடி—கடிகாரம்—கிழமைகள்—மாதங்கள்—வருஷம்**



# 15. கடிகாரம்

## (பாட்டு)




சேவற்கோ ழியுண்டு; காகமுண்டு;-வானம்
செக்கச் சிவந்து தெரிவதுண்டு;
மேவுபொன் னே!அதி காலை தெரிந்திட
வேறும் கடிகாரம் வேண்டுமோடி ? 1

செங்கதிர் பொங்கி வருவதுண்டு;—நல்ல
செந்தா மரைகள் மலர்வதுண்டு;
மங்கையே! காலைப் பொழுதை யுணர்ந்திட
மற்றும் கடிகாரம் வேண்டுமோடி? 2

தன்னிழல் தன்னடி யாவதுண்டு;-சுடர்
தானுந் தலைநேர் எழுவதுண்டு;
இன்னமு தே!பகல் உச்சியி தென்றிட
ஏதும் கடிகாரம் வேண்டுமோடி ? 3

விண்மணி ஆழியில் வீழ்வதுண்டு;-வாசம்
வீசுமந் தாரை மலர்வதுண்டு;
கண்மணி யே! மாலைக் காலம் குறித்திடக்
கையில் கடிகாரம் வேண்டுமோடி ? 4

அம்புலி நட்சத் திரங்களுண்டு-கணக்(கு)
ஆக்கி யறிய வழிகளுண்டு;
இன்பமே! நேரம் இரவில் அறிந்திட
இன்னும் கடிகாரம் வேண்டுமோடி? 5

கவிமணி — சி. தேசிக விநாயகம் பிள்ளை.



## 16. கோழி

1. படத்தில் கோழிகளும், அவற்றின் குஞ்சு-களும் காணப்படுகின்றன. கோழிகள் நமது நாட்-டில் எங்கும் உண்டு. அவை பட்டணங்களிலும் உண்டு ; கிராமங்களிலும் உண்டு.

2. கோழி பறவை இனத்தைச் சேர்ந்தது. பறக்கும் தன்மை உடையது பறவை, ஆனால், சில பறவைகளால் பறக்க முடியாது. கோழியும் பறக்க முடியாத பறவைதான்.

3. கோழிகளுள் ஆண் கோழிக்குச் **சேவல்** என்பது பெயர் ; பெண் கோழிக்குப் **பெட்டை** என்பது பெயர். சேவலுக்கும் பெட்டைக்கும் உரு-வத்தில் வேற்றுமை உண்டு ; சேவலுக்குத் தலை யில் கொண்டை இருப்பதைப் பார். அதன் வாலில் உள்ள இறகுகள் நீளமாய் வளர்ந்திருப்பதைக் கவனி.

4. பெட்டையைக்காட்டிலும் சேவல் உயரமாயும், பருத்தும் இருக்கும். பெட்டையின் காலில் முன்புறம் மூன்று விரல்களும், பின்புறம் ஒரு விரலும் இருக்கும். சேவலின் காலில் பின் விரலுக்கு மேலே கூரிய முள் ஒன்று இருக்கும். சேவல் தன் விரோதிகளை அம்முள்ளினுல் குத்தித் துரத்தும். கோழியின் அலகு குட்டையாயும் கெட்டியாயும் இருக்கும்.

5. கோழிகள் நெல், கேழ்வரகு முதலிய பல வகைத் தானியங்களைத் தின்னும்; பயற்று வகைகளையும் தின்னும்; புழு, பூச்சி முதலியவைகளையும் தின்னும். கோழி தன்னுடைய விரல்களால் தரையைக் கிளறிப் புழுப் பூச்சிக்களைத் தேடும்; அவை கிடைத்தால், தன் அலகால் குத்தித் தின்னும்

6. பெட்டைக் கோழி முட்டை இடும்; தினம் ஒன்ருகச் சுமார் இருபது முட்டைகள் வரை இடும். பிறகு அம்முட்டைகளின்மேல் உட்கார்ந்து அடை காக்கும். மூன்று வாரங்கள் அடைகாத்த பின், முட்டையிலிருந்து குஞ்சு வெளிப்படும். குஞ்சு பெரிதாகும் வரையில் தாய்க் கோழியே அதற்கு இரை தேடித் தரும்.

7. பருந்து இனத்தைச் சேர்ந்த பறவைகளுக்குக் கோழிக் குஞ்சுகளைத் தின்பதில் பிரியம் அதிகம். அவற்றைக் கண்டவுடனே, பெட்டை தன் குஞ்சுகளை அழைக்கும். உடனே குஞ்சுகள் பெட்டையினிடம் ஓடும். பெட்டை தன்னுடைய சிறகுகளால் குஞ்சுகளை மறைத்துக் காக்கும்.

8. கோழி முட்டை நல்ல உணவுப் பொருள். ஆதலால், அதைப் பலர் தின்கின்றனர்; கோழிக்

கறியையும் உண்கின்றனர். ஆகையால், பணம் சம்பாதிக்கும் தொழில்களுள் கோழிவளர்ப்பது ஒன்று. இத்தொழில் அயல் நாடுகளில் அதிகமாய் நடைபெறுகின்றது. நமது நாட்டில் இத்தொழிலை அவ்வளவு முக்கியமானதாக எண்ணுவது இல்லை. இத், தொழில் நல்ல இலாபம் தரத்தக்கது.

### பயிற்சி :

**1. விடை எழுது :—**

அ. கோழி எந்த இனத்தைச் சேர்ந்தது ?

ஆ. ஆண் கோழிக்கு வழங்கும் பெயர் என்ன ?

இ. சேவலுக்கும் பெட்டைக்கும் உள்ள வேற்றுமை யாது?

ஈ. கோழிகள் என்னென்ன பொருள்களைத் தின்னும்?

உ. கோழி வளர்ப்பதால் உண்டாகும் பயன்கள் யாவை ?

**2. பொருத்தி எழுது :—**

| | |
|---|---|
| கோழிகள் | சேவல் எனப்படும். |
| பெண் கோழி | குட்டையாயும் கெட்டியாயும் இருக்கும். |
| ஆண் கோழி | முட்டையிடும். |
| கோழியின் அலகு | பறவை இனத்தவை. |
| பெட்டைக் கோழி | பெட்டை எனப்படும். |

**3. எதிர்ச்சொற்கள் எழுது:—**

| | |
|---|---|
| முடியும் × | வேற்றுமை × |
| உண்டு × | விரோதி × |
| உயரம் × | மறைக்கும் × |



# 17. கதைப் படம்

குறிப்பு : படத்தைப் பார்த்துக் கதையைச் சொல்லச் செய்தல் :





# 18. 'மூங்கில் இலை மேலே'

1. இராமன், சீதை என்பவர்களின் கதை உனக்குத் தெரியும் அல்லவா? இக்கதையைக்கூறும் நூலுக்கு **இராமாயணம்** என்பது பெயர். நூல் என்னும் சொல்லுக்குப் புத்தகம் என்பது பொருள். முதன்முதல் இராமாயணம் சம்ஸ்கிருத மொழியில் எழுதப்பட்டது. அதை எழுதியவர் **வான்மீகி முனிவர்** என்பவர்.

2. பிறகு, தமிழ், தெலுங்கு, ஹிந்தி முதலிய மொழிகளிலும் இராமாயணம் இயற்றப்பட்டது. தமிழ் மொழியில் இராமாயணம் பாடியவர் **கம்பர்**. அவர் பெரும்புலவர். ஆதலால், அவருக்குக் **கவிச்சக்கரவர்த்தி** என்னும் பட்டப்பெயர் வழங்கி வந்தது.

3. கம்பர் **திருவழுந்தூரில்** பிறந்தார்; இளமையில் தாய் தந்தையரை இழந்தார்; திருவெண்ணெய் நல்லூர்ச் **சடையப்ப முதலியாரால்** வளர்க்-

கப்பெற்றார். கம்பர் தமிழை நன்றாய்க் கற்றார்; பெரும்புலவரானார்; பாட்டுப் பாடுவதில் பெயர் பெற்றார்; சோழ அரசன் சபையில் புலவராய் இருந்தார்; அப்போது இராமாயணத்தைத் தமிழில் இயற்றினார்.

4. கம்பர் ஒரு நாள் அயல் ஊருக்குச் சென்றார். வழியில் ஒரு தோட்டம் இருந்தது. தோட்டக்காரன் ஏற்றம் இறைத்துக்கொண்டிருந்தான். ஏற்றம் இறைக்க இருவரோ மூவரோ தேவை. ஒருவரோ இருவரோ ஏற்றத்தின் மீது நின்று மிதிப்பர். ஒருவர் கிணற்றிலிருந்து நீரை இறைப்பர். இறைப்பவர் கஷ்டம் தெரியாமல் இருப்பதற்காகப் பாடிக்கொண்டே இறைப்பது வழக்கம். இப்பாட்டின் மூலம் எத்தனை சால் நீர் இறைக்கப்பட்டது என்னும் கணக்கும் தெரியும்.

5. கம்பர் சென்ற போது தோட்டக்காரன் **'மூப்பதியால் எட்டு மூங்கில்இலை மேலே'** என்று பாடி நிறுத்திவிட்டான். பாட்டின் இந்த அடி, கம்பர் காதில் பட்டது. "மூங்கில் இலை மிக மெல்லியது. அதன் மேலே என்ன இருக்கும்!" என்று யோசித்தார் கம்பர்; யோசித்து யோசித்துப் பார்த்தார். அவருக்கு ஒன்றும் விளங்கவில்லை. தோட்டக்காரன் தன் மனைவி கொண்டு வந்த கஞ்சியைக் குடித்துக்கொண்டிருந்தான். அவன் குடித்துவிட்டு வரும் வரையில் காத்திருந்தார் கம்பர். தோட்டக்காரன் மறுபடியும் வந்து இறைக்கத் தொடங்கினான்; பாட்டையும் தொடர்ந்து பாடினான்; **'மூங்கில் இலை மேலே தூங்கும்பனி நீரே,'** என்று அந்த அடியை அவன் முடித்தான்.

6. அது கேட்ட கம்பர் ஆச்சரியம் அடைந்தார். "எல்லாம் கற்றுவிட்டோம்!" என்று எண்ணினுமே 'ஏற்றப்பாட்டுக்கு எதிர்ப்பாட்டு இல்லை!' என்று நினைத்துக்கொண்டே சென்றார்.

பயிற்சி :

**1. விடை எழுது:—**

அ. 'இராமாயணம்' என்பது என்ன?

ஆ. இராமாயணத்தைச் சம்ஸ்கிருதத்தில் எழுதியவர் யார்?

இ. இராமாயணத்தைத் தமிழில் இயற்றியவர் யார்?

ஈ. கம்பர் பிறந்த ஊர் எது?

உ. சடையப்ப முதலியார் யார்? அவர் கம்பருக்கு என்ன செய்தார்?

ஊ. கம்பர் எந்த அரசர் சபையில் இருந்தார்?

எ. ஏற்றம் இறைப்பவர் பாடுவது எதற்காக?

**2 கீழ் வரும் இரண்டிரண்டு வாக்கியங்களைச் சேர்த்து ஒவ்வொன்ருக எழுது :—**

அ. 1. கம்பர் திருவழுந்தூரில் பிறந்தார்.
2. கம்பர் திருவழுந்தூரில் வளர்ந்தார்,

ஆ. 1. கம்பர் தமிழை நன்கு கற்றார்.
2. கம்பர் கவி பாடுவதில் வல்லவரானார்.

இ. 1. தோட்டக்காரன் பாட்டுப் பாடினான்.
2. தோட்டக்காரன் ஏற்றம் இறைத்தான்.

**3. கீழ் வரும் சொற்களைக்கொண்டு அட்டவணையை நிரப்பு :—**

**கம்பர், சடையப்பர், சபை, அரசன், தோட்டம், ஏற்றம், தோட்டக்காரன், தண்ணீர்.**

| உயர்திணைப் பெயர் | அஃறிணைப் பெயர் |
|---|---|
| | |



# 19. எங்கள் ஊர்ச் சந்தை

(உரையாடல்)

**சுந்தரம் :** மணி, கடல் இரைச்சல் போலச் சத்தம் கேட்கிறதே! அது என்ன?

**மணியன் :** அதுவா? அடுத்த ஊரில் இன்று சந்தை கூடும் நாள். அச்சந்தை இரைச்சலே நமக்கு இங்கு அப்படிக் கேட்கிறது.

**சுந் :** சந்தையா! 'சந்தை' என்பது என்ன?

**மணி :** சந்தையை நீ பார்த்ததே இல்லையா? நீ பட்டணத்தான். நீ சந்தையைப் பார்த்திருக்கமாட்டாய். வா, நாம் சந்தைக்குப் போய் வரலாம்.

**சுந் :** இரைச்சல் மிகவும் அருகில் கேட்கிறதே! ஆனால் ஒன்றும் கண்ணுக்குத் தெரியவில்லையே!

**மணி :** ஏன் தெரியவில்லை? அதோ தெரிகின்ற தோப்பைப் பார்! அதுதான் சந்தைத் தோப்பு.

அங்குப் பல பெரிய புளிய மரங்களும் வேறு சில மரங்களும் இருக்கின்றன. அவற்றின் நிழ-லிலேதான் சந்தைக் கடைகள் வைக்கப்பட்-டிருக்கும்.

**சுந்:** ஓலைக் கொட்டகைகள் தெரிகின்றனவே! அவை என்ன?

**மணி:** அவைகளிலும் கடைகளே உள்ளன. நாம் இப்போது சந்தையைச் சுற்றி வரலாம்.

**சுந்:** அதோ ஓர் ஆலமரத்தின் கீழ் எருதுகள் வரிசை வரிசையாய்க் கட்டியிருக்கின்றனவே! அவை எதற்கு?

**மணி:** அவைகளும் விற்பதற்காகவே கொண்டு வரப்பட்டுள்ளன. இந்தப் பக்கத்துக்கு இது பெரிய சந்தை. வாரந்தோறும் செவ்வாய்க் கிழமையில் இங்குச் சந்தை கூடும். இங்கு மாட்-டுச் சந்தையும் உண்டு.

**சுந்:** கவனித்துப் பார்த்தால், இங்கு விற்காத பொருளே இல்லை என்னலாம். துணி, மிள-காய், புளி, காய்கறிகள், பழங்கள், தயிர், பால், நுங்கு, இளநீர், பனஞ்சாறு, பயற்று வகைகள், பட்சணங்கள் எல்லாம் விற்கப்படு-கின்றன. காப்பிக்கடையும், உண்டிச்சாலையுங்-கூட இருக்கின்றன. ஆனால், இங்குச் சுகாதார முறைகள் சிறிதும் கவனிக்கப்படவில்லையே! எங்குப் பார்த்தாலும் எச்சில் முதலிய அசுத்-தங்கள் காணப்படுகின்றனவே!

**மணி:** உண்மைதான். கிராம மக்களுள் பலர் படி-யாதவர். ஆதலால், அவர்கள் சுகாதார முறை-

களை அறியமாட்டார்கள். கிராமங்களில் படிப்பு அதிகமானல், இந்தக் குறைகள் ஒழியும்.

சுந்: நல்லது! இந்தச் சந்தை இங்கு வாரந்தோறும் கூடக் காரணம் என்ன?

மணி: இங்குள்ள கிராமங்கள் சிறியவை. அவற்றில் பெரிய கடைகள் இரா. ஆதலால், கிராம மக்கள் வேண்டும் துணி முதலிய பொருள்களை வாங்க நெடுந்தொலைவில் உள்ள சிறு பட்டணங்களுக்குப் போகவேண்டும். இங்குச் சந்தை கூடுவதால், எல்லாப் பொருள்களையும் சுற்றுப் புறங்களில் உள்ள கிராமத்தவர் வாங்கிக் கொள்ள முடிகிறது.

சுந்: இந்தச் சந்தை மிகவும் அவசியந்தான். எல்லாவற்றையும் பார்த்துவிட்டேன். வா, போகலாம்.

**பயிற்சி:**

**1. விடை எழுது :—**

அ. நீ எந்தச் சந்தையையாவது பார்த்திருக்கிறுயா?

ஆ. நீ பார்த்த சந்தையில் என்னென்ன பொருள்கள் விற்கின்றன?

இ. சந்தைகள் அசுத்தமாயிருக்கக் காரணம் என்ன?

ஈ. சந்தை கூடுவதன் அவசியம் என்ன?

**2. கீழ் வரும் சொற்களை அட்டவணையில் எழுது :—**

மோட்டார், கலப்பை, காறு, ஏற்றம், புகை வண்டி, நிலையம், மண் வெட்டி, சைக்கிள், ரிக்ஷா, மாட்டுக் கொட்டில், வைக்கோல் போர், சினிமாக் கொட்டகை.

| பட்டணங்களுக்கு உரியவை | கிராமங்களுக்கு உரியவை |
| --- | --- |
| | |

3. கீழ் வரும் ஒவ்வொரு சொல்லிலும் உள்ள எழுத்துக்களால் வேறு சொற்கள் எழுது :—

ஆலமரம், தெரியவில்லை, கொட்டகைகள்,
ஆரம்பம், பக்கத்துக்கு, தலைமயிர்

உதாரணம் : பட்டணம் — படம், பட்டம், பணம்.

4. கீழ் வரும் வாக்கியங்களைத் திருத்து :—

அ. சுந்தரம் ஒரு எருதுகளை ஓட்டிச் சென்றான்.

ஆ. மணி நேற்று காலை வருவான்.

இ. கோழிகள் கூட்டம் கூட்டமாய் மேய்கிறது.

ஈ. கடைகள் கொட்டகையில் இருக்கிறது,

5. கோட்டைத் தகுந்த சொல்லால் நிரப்பு :—

அ. சந்தை இருப்பதை ——— அறியலாம். (பேச்சால், இரைச்சலால்)

ஆ. நீ சொல்வதைக். ——— (பார்க்கிறேன், கேட்கிறேன்.)

இ. சந்தை சாதாரணமாக ——— கூடும். (கட்டடத்தில், தோப்பில்)

ஈ. சந்தைக்கு எருதுகள் ——— கொண்டுவரப் படுகின்றன. (வாங்குவதற்காக, விற்பதற்காக)





## 20. தந்திரம் பலித்தது.

1. விசயபுரத்தில் வேதியர் ஒருவர் இருந்தார். அவர் ஒரு யாகம் செய்ய விரும்பினார். அந்த யாகத்துக்கு ஓர் ஆடு தேவைப்பட்டது. வேதியர் அடுத்த ஊருக்குச் சென்றார்; ஒரு செம்மறிக் கடாவை வாங்கினார். அதைத் தோளில் தூக்கிக்கொண்டு, தமது ஊருக்கு வரத் திரும்பினார்.

2. வழியில் அயோக்கியர் மூவர் அவரைக் கண்டனர்; அந்த ஆட்டை வஞ்சனையால் பெற எண்ணினர்; 'எப்படிப் பெறுவது?' என்பதை யோசித்தனர். அவர்களுக்கு யோசனை தோன்றியது.

3. உடனே மூவருள் ஒருவன் பிராமணரிடம் வந்தான். "ஐயா, பிராமணரே, இந்த நாயை ஏன் தோளின்மேல் தூக்கிச் செல்கின்றீர்?' என்று கேட்டான். அது கேட்ட பிராமணருக்குக் கோபம் வந்துவிட்டது. "ஏன் ஐயா, நான் ஆட்டைத் தூக்கிச் செல்கிறேன். நீர் அதை நாய் என்கிறீரே! உமக்குக் கண் குருடோ?" என்று சொல்லிவிட்டுச் சென்றார்.

4. வேதியர் சிறிது தூரம் சென்றார். அங்கு மற்றொருவன் அவரிடம் வந்து, அவரைப் பார்த்து, "ஐயா, வேதியரே, நீர் ஏன் இந்தக் கன்றுக்குட்டி-யைத் தூக்கிச் செல்கின்றீர்?" என்று கேட்டான். அது கேட்ட பிராமணர் சற்றுத் திகைத்தார். "நாம் தூக்கி வந்தது ஆட்டுக் குட்டி! இதை ஒருவன் நாய் என்றான்! மற்றொருவன் கன்றுக்குட்டி என்றான்! இது சந்தேகிக்கத் தக்கதாய் இருக்கிறதே!" என்று எண்ணிக்கொண்டே போனார்.

5. பிராமணர் சிறிது தூரம் சென்றதும் மூன்றாமவன் அவரிடம் வந்து, "ஐயா, வேதியரே, நீர் ஏன் இந்தக் கழுதைக்குட்டியைச் சுமந்து கொண்டு போகின்றீர்?" என்று கேட்டான். அதைக் கேட்டவுடனே பிராமணருக்குப் பயம் உண்டாகி விட்டது. அவர் தாம் தூக்கிச் செல்வது ஒரு பிசா-சாகத்தான் இருக்க வேண்டும் என்று நிச்சயித்தார்; உடனே தோளில் இருந்த ஆட்டைக் கீழே போட்டு விட்டு ஓட்டம் பிடித்தார். வஞ்சகர்கள் ஆட்டை ஓட்டிக்கொண்டு சென்றார்கள்.

### பயிற்சி :

**1. விடை எழுது :—**

அ. பிராமணர் ஏன் ஆடு வாங்கினார்?

ஆ. முதல் வஞ்சகன் பிராமணரிடம் என்ன சொன்னான்?

இ. இரண்டாமவன் மறையவருக்குச் சொன்னது என்ன?

ஈ. மூன்றாம் வஞ்சகன் வேதியரைக் கண்டு கூறியது யாது?

உ. பிராமணர் ஏன் ஆட்டைப் போட்டுவிட்டு ஓடிவிட்டார்?

2. ஒரே பொருள் உள்ள சொற்களை நேருக்கு நேர் எழுது:—

| | |
|---|---|
| வேதியர் | தந்திரக்காரர் |
| தேவைப்பட்டது | நினைத்தனர் |
| வஞ்சகர் | தந்திரம் |
| எண்ணினர் | சுமந்து |
| வஞ்சனை | மறையவர் |
| தூக்கி | வேண்டியிருந்தது |

3. எதிர்ச்சொற்களை எதிர் எதிராக எழுது:—

விரும்பினார் — யோக்கியர் — வந்தான் — ஒருவர்—சிறிது தூரம் — சேவல்.

சென்றான் — வெறுத்தார்—பலர்—நெடுந்தூரம் —பெட்டை — அயோக்கியர்.

4. கீழ்வரும் சொல் வரிசைகளை வாக்கியங்களாக்கு:—

அ. ஊரில் ஒரு இருந்தார் வேதியர் ஓர்

ஆ. ஒரு விரும்பினார் யாகம் அவர் செய்ய.

இ. அயலூர் ஆடு யாகத்துக்கு வாங்க சென்றார் அவர்.

ஈ. மூவர் வழியில் அயோக்கியர் கண்டனர் அவரை.





## 21. பசு

1. இது பசுவின் படம். பசு விலங்கு இனத்தைச் சேர்ந்தது. நான்கு கால்கள் உள்ள பிராணிக்கு விலங்கு என்பது பெயர். மனிதர் வீடுகளில் வளர்க்கும் விலங்குகள் சில உண்டு. அவற்றுள் மிகவும் முக்கியமானது பசுவே. பசுவால் மனிதர்கள் அடையும் பயன்கள் பல.

2. பசுவைக் கவனித்துப் பார். பசுவின் தலையில் இரண்டு கொம்புகள் இருக்கின்றன. பசு, தன் கொம்புகளால் தன்னைத் தன்னுடைய விரோதிகளிடமிருந்து காத்துக்கொள்கிறது. பசுவின் வால் நீண்டது; அதன் நுனியில் குஞ்சம் போல மயிர் அடர்ந்திருக்கிறது. பசு, தனது வாலால் தன்னைக் கடிக்கும் ஈ, கொசுகு முதலியவற்றை ஓட்டும். பசுவின் வாயின் முன்பக்கம் கீழ்ப்பக்கத்தில் மட்டுமே பற்கள் உண்டு. பசுவின் குளம்பு பிளவு பட்டிருக்கும்.

3. பசு, புல்லையும் வைக்கோலையும் தின்னும். பசு நமக்குப் பாலைத் தருகிறது. தவிடு, பிண்ணாக்கு, பருத்திக்கொட்டை முதலிய பொருள்களைப் பசுவுக்குத் தீனியாக வைத்தால், அது பால் அதிகம் தரும்.

147011
TB 031(3) N52

4. பசுவைக் கட்டும் இடத்துக்குத் **தொழுவம்** என்பது பெயர். பசுத் தொழுவம் காற்ரேட்டம் உள்ள மேடான இடத்தில் இருக்க வேண்டும். தினந்தோறும் தொழுவத்தைச் சுத்தப்படுத்த வேண்டும். கன்றுகளுக்கு இடம் தனியே இருக்க வேண்டும். கன்றுகளை வீட்டின் உள்ளே கட்டுவது கூடாது. பசுவையும் கன்றையும் வாரம் ஒரு முறையாவது குளிப்பாட்ட வேண்டும்.

5. கன்று பால் ஊட்டிய பின், பசுவின் மடியைத் தண்ணீரால் கழுவிப் பால் கறக்க வேண்டும். கன்றுக்கு நிரம்பப் பால் விட வேண்டும். பசுவையோ, கன்றையோ அடிப்பது கூடாது. அவற்றினிடம் அன்பாகப் பழக வேண்டும்.

6. பசுவின் பால் சிறந்த உணவுப் பொருள். அது குழந்தை முதல் கிழவர் வரை அனைவருக்கும் பயன்படுகிறது. பாலை நன்ருகக் காய்ச்சி, அதில் சில துளி மோர் விட்டு வைத்தால், அது தயிராய்க் கட்டிவிடும். பாலில் மோர் விடுவதைப் **பிரையிடல்** என்று கூறுவது வழக்கம். தயிரை மத்தால் கடைந்தால், வெண்ணெய் திரண்டு வரும். வெண்ணெயைக் காய்ச்சிஞல், நெய்யாகும். வெண்ணெய் எடுக்கப்பட்ட தயிர் கட்டியாய் இராது; நீர் போல இருக்கும். அதற்கு மோர் என்பது பெயர். **பால், தயிர், மோர், வெண்ணெய், நெய்** ஆகியவை சிறந்த உணவுப் பொருள்கள்.

7. பசு இறந்தபின் அதன் தோலால் செருப்பு முதலிய பொருள்கள் செய்யலாம். பசுவின் கொம்பால் சீப்பு, பொத்தான் முதலிய பொருள்களைச் செய்யலாம். பசுவின் குளம்பிஞல் ஒரு வகை ஓட்-

டுப்பசை செய்யப்படுகிறது. பசுவினுல் நாம் அடை-யும் பயன்களை எண்ணிப் பார்!

### பயிற்சி:

**1. விடை எழுது :—**

அ. பசு எவ்வினத்தைச் சேர்ந்தது ?

ஆ. 'விலங்கு' என்பது எதற்குப்பெயர்?

இ. கொம்புகளால் பசுவுக்கு என்ன பிரயோசனம் ?

ஈ. பசுவுக்கு அதன் வாலால் என்ன பிரயோசனம் ?

உ. பசு அதிகம் பால் தருவதற்கு என்ன தீனி வைக்க வேண்டும் ?

ஊ. பசுவைக் கட்டும் இடத்துக்கு என்ன பெயர் ?

எ. பாலிலிருந்து நமக்குக் கிடைக்கும்பொருள்கள் எவை?

**2. வாக்கியங்களாக எழுது :—**

அ நான்கு பிராணிக்கு கால்கள் என்பது உள்ள விலங்கு பெயர்

ஆ. நுனியில் பசுவின் மயிர் வால் குஞ்சம் அடர்ந்து போல இருக்கிறது

**3. இதைத் தெரிந்துகொள் :—**

பசு, புல் **மேய்ந்தது.**
பசு, தண்ணீர் **குடிக்கிறது,**
பசு, பால் **தரும்.**

பசு, என்ன செய்தது ?—**மேய்ந்தது.**
பசு, என்ன செய்கிறது ?—**குடிக்கிறது.**
பசு, என்ன செய்யும்?—பால் **தரும்.**

**மேய்ந்தது, குடிக்கிறது, தரும்** என்னும் சொற்கள் **தொழில்** நடைபெறுவதைக் குறிக்கின்றன. இவை **வினைச்சொற்கள்.**

**மனப்பாடம் செய் :**

**ஒரு பொருளின் தொழில் நிகழ்ச்சியைக் குறிக்கும் சொல் வினைச் சொல்.**



# 22. உழவுத் தொழில்

1. மனிதர் பற்பல தொழில்களைச் செய்கின்றனர். அவை எல்லாவற்றிலும் சிறந்தது உழவுத் தொழிலே. **பயிர்த்தொழில், விவசாயத் தொழில்** என்பவை உழவுத் தொழிலுக்கு வழங்கும் வேறு பெயர்கள். இத்தொழிலைச் செய்பவர்க்கு **உழவர், விவசாயிகள், வேளாளர்** என்னும் பெயர்கள் வழங்குகின்றன.

2. பயிர் செய்யும் நிலத்துக்கு **வயல்** என்பது பெயர். நிலம் **நன்செய், புன்செய்** என இரு வகைப்படும். **'செய்'** என்னும் சொல்லுக்கு **'வயல், கழனி'** என்னும் பொருள்கள் உண்டு. நீர் பாய்ச்சிப் பயிர் செய்யும் நிலத்துக்கு **நன்செய்** என்பது பெயர். நீர் பாய்ச்சாமல் மழை நீரின் உதவியால் பயிர் செய்யும் நிலத்துக்குப் **புன்செய்** என்பது பெயர். இவற்றை நஞ்சை, புஞ்சை என்றும் வழங்குவார்கள். புன்செய்யை 'வானம் பார்த்த பூமி' என்றும், 'வானவாரி நிலம்' என்றும் கூறுவது உண்டு. 'வயல்' என்பது, நன்செய்க்கு உரிய பெயர்.

3. நன்செய்யை நீர் பாய்ச்சி, உழுது, சேறுக்கிப் பயிர் செய்வது வழக்கம். இதற்குச் **'சேடைப் பயிர்'** என்பது பெயர். புன்செய்யை ஈரத்தில்

உழுது, புழுதியாக்கிப் பயிர் செய்வது முறை. இது '**புழுதிக்கால்**' எனப்படும். சேடையில் விதையை விதைத்தும், நாற்றை நட்டும் பயிரிடுவர். விதை தூவுவதற்கு '**விதைத்தல்**' என்பது பெயர்; நாற்று நடுவதற்கு '**நடவு**' என்பது பெயர். புழுதிக்காலை விதைத்தே பயிர் செய்வர்.

4. விதைத்த பின், அல்லது நடவு நட்ட பின் பயிரோடு புல் பூண்டுகள் முளையத் தொடங்கும். இவற்றைக் களைந்து எறிய வேண்டும். நன்செய்யில் கையாலும், புன்செய்யில் '**களைக்கொட்டு**' என்னும் கருவியாலும் புல் பூண்டுகளை நீக்க வேண்டும். இதற்குக் '**களை எடுத்தல்**' என்பது பெயர்.

5. பொதுவாக நன்செய்யில் **நெல்லும் கரும்பும்** பயிர் செய்வர். புன்செய்யில் **கம்பு, கேழ்வரகு, சோளம், தினை, எள்ளு, கொள்ளு, துவரை, மொச்சை, கடலை, உழுந்து, நிலக்கடலை** முதலிய தானியங்களைப் பயிர் செய்வர்.

6. பயிர்த்தொழிலுக்குப் பல விதக் கருவிகள் வேண்டும்: நிலத்தை உழுவதற்குக் **கலப்பை** வேண்டும். அண்டை வெட்டுவதற்கு **மண் வெட்டி** வேண்டும். களையெடுப்பதற்குக் **களைக்கொட்டு** வேண்டும். அறுவடை செய்ய **அரிவாள்** வேண்டும். நிலத்தைச் சமப்படுத்துவதற்குப் **பரம்புச் சட்டம்** வேண்டும். நீர் இறைக்க **இறைசால்** வேண்டும். ஏர் உழுவதற்கும், பரம்படிப்பதற்கும் மாடுகள் வேண்டும்.

7. விவசாயிகள் இத்தனை பொருள்களையும் தேடிப் பயிர்த்தொழில் செய்து, அனைவர்க்கும் உணவு கிடைக்கச் செய்கிறார்கள். ஆதலால், உழவுத்

தொழிலே மிக உயர்ந்தது. அத்தொழில் செய்யும் உழவர் மிகுந்த மேன்மை உள்ளவர். நாம் உழவுக்கு வந்தனை செய்ய வேண்டும்.

**பயிற்சி :**

**1. விடை எழுது :—**

அ. பயிர்த்தொழிலுக்கு வழங்கும் வேறு பெயர்கள் எவை?

ஆ. பயிர் செய்பவர்க்கு வழங்கும் வேறு பெயர்கள் எவை ?

இ. பயிர் நிலம் எத்தனை வகைப்படும்? அவை எவை ?

ஈ. நன்செய்யில் பயிர் செய்யும் முறை யாது ?

உ. புன்செய்யில் பயிர் செய்யும் முறை யாது ?

ஊ. 'களையெடுத்தல்' என்பது என்ன ?

எ. நன்செய்யில் விளையும் தானியங்கள் எவை ?

ஏ. புன்செய்யில் விளையும் தானியங்கள் எவை ?

**2. எதற்கு எது வேண்டும் ?**

| | |
|---|---|
| பயிர் வளர | அரிவாள் வேண்டும். |
| நிலம் உழ | களைக்கொட்டு வேண்டும். |
| நிலத்தைச் சமப்படுத்த | எருது வேண்டும். |
| கதிர் அறுக்க | இறைசால் வேண்டும். |
| களை எடுக்க | பரம்புச் சட்டம் வேண்டும். |
| ஏர் உழ | நீர் வேண்டும். |
| ஏற்றம் இறைக்க | கலப்பை வேண்டும். |

**3. கீழ் வரும் வாக்கியங்களில் உள்ள வினைச்சொற்களை எடுத்து எழுது :—**

அ. நிலம் உழுதான்.

ஆ. நீர் இறைத்தான்.

இ. அறுவடை செய்தான் ?





# 23. ஆதி காலத்து மக்கள்

1. இக்காலத்தில் நாம் கிராமங்களிலும் பட்டணங்களிலும் வாழ்கிறோம்; வசிக்கச் சிறந்த வீடுகளைக் கட்டிக்கொள்கிறோம்; அழகிய ஆடைகளை அணிகிறோம்; விரும்பும் உணவை உட்கொள்ளுகிறோம். நம் வீடுகளிலும் தெருக்களிலும் மின்சார விளக்குகள் எரிகின்றன. நாம் இரயில், மோட்டார், ஆகாயவிமானம் முதலியவற்றில் பிரயாணம் செய்கிறோம். இவை எல்லாம் இல்லாத காலமும் இருந்தது. அக்காலத்தில் மக்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்பதை இப்பாடத்தால் அறியலாம்:

2. அக்காலத்தில் வாழ்ந்த மக்கள் தொகை சிறியது. அவர்கள் அழகிய ஆடை அணிவதை அறியாதவர்கள்; மரப்பட்டையும், தழைகளும், விலங்குகளின் தோல்களுமே அவர்கள் அணிந்த ஆடைகள்.

3. அக்கால மக்கள் காடுகளிலும் மலைகளிலும் விலங்குகளோடு விலங்குகளாய் வாழ்ந்தார்கள். காடுகளில் கிடைத்த காய்கனி கிழங்குகளை உண்டார்கள்; தங்களைக் கொல்ல வரும் மிருகங்களைக் கல்லாலும், கழியாலும் அடித்துக் கொன்றார்கள்; அவற்றின் மாமிசத்தைப் பச்சையாகவே தின்றார்கள். அவர்களுக்கு நெருப்பை உண்டாக்குவது தெரியாது.

4. அவர்கள் கற்களையே கருவிகளாக உபயோகித்தார்கள்; அந்தக் கருவிகளைச் செய்யும்போது சில கற்களை ஒன்றோடு ஒன்று மோதினால் நெருப்புப் பொறி உண்டாவதைக் கவனித்தார்கள். ஆகவே, அந்தக் கற்களைத் தேடி எடுத்து, ஒன்றோடு ஒன்று மோதி, உலர்ந்த சருகுகளில் நெருப்புப் பிடிக்கும்படி செய்தார்கள்.

5. சில சமயங்களில் காற்று வேகமாய் வீசும். அப்போது மூங்கில்கள் ஒன்றோடு ஒன்று உராயும். அதனால், நெருப்பு உண்டாகும். அடர்ந்த காடுகளில் இம்மாதிரி நெருப்புப் பற்றினால், சில விலங்குகள் நெருப்பில் சிக்கி இறக்கும். அவர்கள் அவற்றின் மாமிசத்தைத் தின்று பார்த்து, பச்சை மாமிசத்தைக்காட்டிலும் வெந்த மாமிசம் உருசியாய் இருக்கக் கண்டார்கள்; ஆகவே, தீ மூட்டி உணவுப் பொருள்களை வேக வைத்து உண்பதை அறிந்தார்கள்.

6. ஆதி காலத்து மக்கள், மிருகங்களுக்குப் பயந்து, மரக்கிளைகளிலும், மலைக் குகைகளிலும் வாழ்ந்தார்கள். அவர்கள் தங்கிய இடங்களில் தாங்கள் உண்ட பழங்களின் கொட்டைகளைத் துப்பிய

தால், அவை மழை காலத்தில் முளைத்ததைக் கண்டார்கள்; பிறகு தாங்கள் விரும்பிய மரம் செடிகளின் விதைகளை நட்டுப் பயிர் செய்யக் கற்றுக் கொண்டார்கள்.

7. பயிர் செய்வதை அறிந்த பிறகு அம்மக்கள் காடுகளில் வசிக்கவில்லை; பயிர்களுக்கு நீர் கிடைக்கத்தக்க ஆற்றங்கரைகளில் வசிக்கத் தொடங்கினர்கள். அப்போது தங்கியிருக்கக் கிளைகளை நட்டுத் தழைகளால் மூடி, குடிசைகள் அமைப்பதை அறிந்தார்கள்; மிருகங்களை எதிர்க்கத் தங்கள் குடிசைகளை நெருங்கி இருக்கும்படி அமைத்தார்கள். இந்த அமைப்பே கிராமம் ஆயிற்று. இவ்வாறு மனிதர்கள் தங்கள் அறிவால் படிப்படியாய் உயர்ந்து மேல் நிலையை அடைந்தார்கள்.

### பயிற்சி:

**1. விடை எழுது :—**

அ. ஆதி காலத்து மக்கள் உடையாக அணிந்தவை யாவை?

ஆ. ஆதி காலத்து மக்கள் உபயோகித்த கருவிகள் யாவை?

இ. ஆதி காலத்து மக்கள் நெருப்பு உண்டாக்க எவ்வாறு அறிந்தார்கள்?

ஈ. அவர்கள் எப்படிப் பயிர் செய்யக் கற்றுக்கொண்டார்கள்?

உ. 'கிராமம்' என்பது முதல் முதல் எவ்வாறு தோன்றியது?

**2. இதைத் தெரிந்துகொள் :—**

'அவன் **வந்தான்**.' என்று சொல்ல வேண்டும்.
'அவள் **வந்தாள்**.' என்று சொல்ல வேண்டும்.

'**அவர்கள் வந்தார்கள்.**' என்று சொல்ல வேண்டும்.
'**அது வந்தது.**' என்று சொல்ல வேண்டும்.
'**அவை வந்தன.**' என்று சொல்ல வேண்டும்.

**3. பொருத்தி எழுது :—**

| | |
|---|---|
| முருகன் | பேசினார்கள். |
| கமலம் | மேய்கின்றன. |
| இராமனும் சீதையும் | பாடினாள். |
| பசு | ஓடுகிறான். |
| ஆடுகள் | நீர் குடிக்கிறது. |
| நான் | விளையாடுகிறாய். |
| நீ | படிக்கிறான். |
| அவன் | பாடினான். |
| அவள் | வருவார்கள் |
| அவர்கள் | சாப்பிடுகிறேன். |

**4. எதிர்ச் சொற்களைப் பொருத்தி எழுது :—**

| | |
|---|---|
| விருப்பம் | இக்காலம் |
| அக்காலம் | இறந்தது |
| பிறந்தது | மறைந்தது |
| தோன்றியது | உண்டாக்கினான் |
| அழித்தான் | தாழ்ந்தனர் |
| உயர்ந்தனர் | வெறுப்பு |



## 24. யானை

1. விலங்குகளுள் பெரியது யானை. அதன் படத்தைப் பார். யானையின் கால்களைக் கவனி. அவை உரல்கள் போலக் கனத்தும், குட்டையாயும் உள்ளன. யானையின் காதுகள் முறம் போல மிகவும் அகன்று இருப்பதைப் பார். யானையின் உறுப்புக்களுள் மிகவும் முக்கியமானது துதிக்கை. அதைத் தும்பிக்கை என்றும் சொல்வர்.

2. நமக்குக் கை உதவுவது போல யானைக்குத் துதிக்கை உதவுகிறது. யானை தனது துதிக்கையால் எந்தப் பொருளையும் சுலபமாக எடுக்கும். அது துதிக்கையால் தண்ணீரை முகந்து, வாயினுள் விட்டுக் குடிக்கும். யானைக்கு மூச்சு விட உதவுவதும் துதிக்கையே.

3. ஆண் யானைக்குத் தந்தங்கள் உண்டு. அவை யானையின் வாயில், பக்கத்துக்கு ஒன்ருய் அமைந்-

திருக்கும். அவை வெண்மையாயும், பளபளப்பாயும் இருக்கும். அவற்றின் விலை அதிகம். இதனாலே தான், 'யானை இருந்தாலும் ஆயிரம் பொன்; இறந்தாலும் ஆயிரம் பொன்,' என்னும் பழமொழி வழங்குகிறது.

4. யானை, தனக்குத் தீங்கு செய்தவரை எப்போதும் மறவாது; பழி வாங்கிய பிறகுதான் அவரை மறக்கும்.

5. ஒரு கோவிலில் ஒரு யானை இருந்தது. அது வீதியில் போகும் போது யாராவது ஏதாவது தின்பண்டம் கொடுத்தால், அதை வாங்கித் தின்னும்.



6. ஒரு கெட்ட பையன் அந்த யானையை ஏமாற்ற எண்ணினான். அவன் தேங்காய்க் குடுக்கையில் ஊசி, கல், சுண்ணாம்பு முதலிய பொருள்-

களை நிரப்பி, அதை அந்த யானைக்குக் கொடுத்தான். அது அக்குடுக்கையை வாங்கித் தின்ன முயன்றது. அதனுள் இருந்த பொருள்கள் யானைக்குத் துன்பத்தை உண்டாக்கின. அதை யானை மறக்கவில்லை.

7. சில மாதங்கள் கழித்துக் கோவிலில் திருவிழா நடைபெற்றது. ஒரு நாள் பையன் விழாவைப் பார்க்கச் சென்றான். யானை அவனை எப்படியோ கண்டுவிட்டது. உடனே அது வீதியில் இருந்த ஒரு கல்லை எடுத்து அவன்மேல் வீசியது. பையன் பயந்து ஓடிக் கூட்டத்தில் மறைந்துவிட்டான். அதுமுதல் அந்தப் பையன் யானை இருக்கும் திசையிலேயே செல்வதில்லை.

### பயிற்சி :

**1. விடை எழுது :—**

அ. யானையின் முக்கியமான உறுப்பு எது? அதன் உபயோகங்கள் என்ன?

ஆ. 'யானை இருந்தாலும் ஆயிரம் பொன்; இறந்தாலும் ஆயிரம் பொன்,' என்னும் பழமொழி வழங்கக் காரணம் என்ன?

இ. யானையினிடம் காணப்படும் குணம் யாது?

ஈ. பையன் யானைக்குச் செய்த தீங்கு என்ன?

**2. பொருத்தி எழுது :—**

| | |
|---|---|
| யானை | தந்தங்கள் இருக்கின்றன. |
| யானையின் கால்கள் | இருந்தது. |
| ஆண் யானைக்குத் | கொடுப்பார்கள். |
| ஒரு கோவிலில் ஒரு யானை | கொடுத்தான். |
| சிறு பிள்ளைகள் அதற்குத் | தின்றது. |

| | |
|---|---|
| தின்பண்டங்கள் | |
| யானைக்கு ஒரு பையன் | பருத்திருக்கின்றன. |
| தேங்காய் | |
| யானை அதை வாங்கி | மிகப் பெரிய மிருகம். |

3. எதிர்ச்சொற்கள் எழுது :—

| | |
|---|---|
| பெரியது × | அதிகம் × |
| கனமாக × | மறவாது × |
| உதவும் × | சேவல் × |





## 25. நரியின் தந்திரம்

1. ஒரு காட்டில் ஒரு நரி வசித்து வந்தது. ஒரு நாள் அது இறந்த யானை ஒன்றின் உடலைக் கண்டது; அதன் மாமிசம் முழுவதையும் தானே தின்னவிரும்பியது. ஆனால், யானையின் தடித்த தோலைக் கிழிக்க நரியால் முடியாது. ஆதலால், அதைக் கடித்துக் கிழிக்கத்தக்க விலங்கு ஏதேனும் அப்பக்கம் வரும் என்று எண்ணி, அது காத்துக்கொண்டிருந்தது.

2. சற்று நேரத்தில் அங்கு ஒரு சிங்கம் வந்தது. அதைக் கண்ட நரி, "அரசரே, உமக்காகவே யான் இந்த யானையின் உடலைக் காத்துக்கொண்டு இருக்கிறேன். இதைத் தின்று நீர் பசி ஆறலாமே!" என்றது. அது கேட்ட சிங்கம், "நரியே, நானே அடித்துக்கொன்ற விலங்கைத்தான் நான் தின்பது வழக்கம். இந்த யானையின் மாமிசத்தை நீயே தின்," என்று சொல்லிவிட்டுப் போய்விட்டது.

3. சிறிது நேரம் கழித்து ஒரு சிறுத்தை அவ் வழியே வந்தது. அதைக் கண்ட நரி, "சிறுத்தையே, இந்த யானையை நம் சிங்க ராஜா கொன்று, என்னைக் காவல் வைத்துவிட்டு, குளிக்கச் சென்றி-

ருக்கிறது. உனக்கு விருப்பமானால், சிங்கம் வருமுன் நீ சிறிது மாமிசம் தின்னலாம்," என்றது.

4. நரி கூறியதை உண்மை என்று நம்பியது சிறுத்தை. உடனே அது யானையின் தோலைக் கிழித்து, மாமிசத்தைத் தின்னத் தொடங்கியது. அது கண்ட நரி, "சிங்கம் வருகிறது! சீக்கிரம்—ஓடிப் பிழைத்துக்கொள்!" என்று சொல்லியது.

5. அது கேட்ட சிறுத்தை ஓட்டம் பிடித்தது. நரி, யானையின் மாமிசத்தை வேண்டியமட்டும் தின்றது; "மிச்சம் இருப்பதை நாளை வந்து உண்பேன்," என்று கூறிக்கொண்டே தன் இருப்பிடம் சென்றது.

## பயிற்சி:

1. **விடை எழுது:—**

அ. நரி யானையின் உடலை ஏன் தின்னாமல் இருந்தது?

ஆ. சிங்கம் ஏன் யானை மாமிசத்தைத் தின்னவில்லை?

இ. யானையின் தோலைக்கிழிக்க நரி செய்த தந்திரம் யாது?

ஈ. சிறுத்தையைத் துரத்த நரி என்ன தந்திரம் செய்தது?

2. **கோடுகள் உள்ள இடங்களில் தகுந்த சொற்களை எழுது:—**

அ. ஒரு காட்டில் ஒரு நரி———. (தூங்கியது, ஓடியது, வசித்தது.)

ஆ. யானையின் தோல் மிகவும்———. (கருமையானது, தடித்தது, சுரசுரப்பானது.)

இ. சிங்கம் மிகவும்———விலங்கு. (கோபமுள்ள, சாதுவான, கொடிய.)

ஈ. நரி———மிக்க பிராணி, (தந்திரம், வஞ்சகம், பயம்)

**3. கீழ் வரும் சொல் வரிசைகளை வாக்கியங்களாக்கு :—**

அ. மிக்கது நரி விலங்குகளில் தந்திரம்

ஆ. பற்றி கதைகள் நரியின் பல தந்திரத்தை உண்டு

இ. எனப்படும் அரசு விலங்குகளுக்கு சிங்கம்

**4. எது எதற்குப் பொருந்தும் ?**

| | |
|---|---|
| உடல் | மிருகம் |
| இறந்தது | மன்னரே |
| மாமிசம் | கொஞ்சம் |
| விலங்கு | ஆரம்பித்தது |
| அரசரே | தசை |
| சிறிது | செத்தது |
| தொடங்கியது | தேகம் |

**5. எதிர்ப் பதங்கள் எழுது :**

| | |
|---|---|
| தடித்த × | உண்மை × |
| இறந்தது × | ஆரம்பம் × |





## 26. எது உயர்ந்த தொழில்?

1. **நாகராசர்** என்பவர், கூவத்தூர் ஜமீந்தார். அவர் தமது பிறந்த நாள் விழாவிற்கு ஊராரை அழைத்துப் பெரிய விருந்து நடத்தினர்; பிறகு, அவ்வூர்த் தொழிலாளரைத் தருவித்தார். அவர் அருகில் மேசையின்மேல் நூறு ரூபா கொண்ட ஒரு பணப்பை இருந்தது.

2. ஜமீந்தார், தொழிலாளரைப் பார்த்து, "உங்களுள் முக்கியமான தொழிலாளிக்கு இந்தப் பணத்தைப் பரிசாகத் தரப் போகிறேன். எது உயர்ந்த தொழில்? கூறுங்கள்," என்று கேட்டார்.

3. உடனே **எல்லன்** என்பவன் எழுந்து, "பிரபுவே, நான் ஓர் உழவன். நான் நிலத்தை உழுது பயிர் செய்கிறேன்; எல்லார்க்கும் உணவும் உடையும் என்னுல் கிடைக்கின்றன. உழுதொழில் நடவா-

மற் போனல் உலகம் பட்டினி கிடக்க வேண்டும். ஆதலால், **உழவுத்தொழிலே சிறந்தது**," என்றான்.

4. பின்பு **குப்பாசாரி** என்பவன் எழுந்து, "ஐயா, வீடுகளுக்குக் கதவு, சன்னல், தூண், விட்டம் முதலியவற்றை நான் செய்கிறேன். மேசை, நாற்காலி, கட்டில் முதலியனவும் நானே செய்கிறேன். நான் அவைகளைச் செய்யாவிட்டால், மக்கள் சுகமாக வாழ முடியுமா? ஆதலால், எனது **தச்சத்தொழிலே மேலானது**," என்றான்.

5. பிறகு **கோவிந்தன்** என்பவன் எழுந்து, "பிரபுவே, நான் கொல்லன். வீட்டுக்கு வேண்டிய ஆணி, தாழ்ப்பாள், பூட்டு, சாவி முதலியன என்னால் செய்யப்படுகின்றன. பயிர்த்தொழிலுக்கு வேண்டிய காறு, கடப்பாரை, மண்வெட்டி முதலியவற்றையும் நானே செய்கிறேன். தச்சவேலைக்கு வேண்டிய உளி, வாள், இழைப்புளி என்பனவும் என்னால் செய்யப்படுகின்றன. நான் இல்லாவிட்டால், எத்தனையோ தொழில்கள் நடைபெறா. எனவே, **கொல்லத் தொழிலே சிறந்தது**," என்றான்.

6. பின்னர், **சம்பந்தன்** என்பவன் எழுந்து, "பிரபுவே, நான் சட்டி பானை முதலிய மண்பாண்டங்கள் செய்பவன். நான் இல்லாவிட்டால், நீங்கள் உணவு சமைக்கப் பாண்டங்கள் எப்படிக் கிடைக்கும்? ஆதலால், எனது **குலாலத் தொழிலே** மேன்மையானது," என்றான்.

7. அப்புறம் **முத்துசாமி முதலி** எழுந்து, "செல்வரே, நான் உபாத்தியாயன்; மாணவர்க்கு எண்ணும் எழுத்தும் கற்பிக்கிறவன். மனிதர் அறிவு வளர்வது என்னால் அல்லவா? ஆதலால்,

ஆசிரியத் தொழிலே எல்லாத் தொழில்களைக்காட்டிலும் மேலானது,'' என்று மொழிந்தான்.

8. இவற்றைக் கேட்ட ஜமீந்தார் திகைத்தார். "தீர யோசித்தால், ஒவ்வொரு தொழிலும் சிறந்ததாகவே இருக்கிறது; மனிதர் மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கு ஒவ்வொரு தொழிலும் முக்கியமாகவே இருக்கிறது. ஆகையால், தொழிலாளர்களே, நீங்கள் எல்லாரும் சமமானவர்கள். ஆகையால், இந்தப் பணத்தை உங்களுக்குச் சமமாகப் பங்கிட்டுத் தருகிறேன். பெற்றுச் செல்லுங்கள்,'' என்று சொல்லி, தாம் சொன்னபடியே பணத்தைப் பங்கிட்டுக் கொடுத்தார்.

9. ஆகையால், உலகில் நடைபெறும் தொழில்கள் அனைத்தும் அவசியமானவைகளே. நாம் அவற்றைச் சமமாகவே எண்ண வேண்டும்.

## பயிற்சி :

**1. விடை எழுது :—**

அ. ஜமீந்தார் தொழிலாளரை ஏன் வரவழைத்தார் ?

ஆ. உழவுத் தொழில் எவ்வாறு சிறந்தது ?

இ. கொல்லத் தொழில் எப்படி முக்கியமானது ?

ஈ. ஜமீந்தார் ஏன் பணத்தை எல்லார்க்கும் சமமாகப் பங்கிட்டார் ?

உ. பாடத்தில் கூறப்படாத தொழில்கள் மூன்று எழுது.

**2. எது எதில் இருக்கும் ? வாக்கியங்களாக எழுது:—**

| | |
|---|---|
| பசு | பட்டி |
| குதிரை | கூண்டு |
| ஆடு | வளை |

| | |
|---|---|
| கிளி | காடு |
| எலி | வீடு |
| யானை | மரப்பொந்து |
| நாய் | இலாயம் |
| ஆந்தை | தொழுவம் |

3. ஒவ்வொரு சொல்லிலும் உள்ள எழுத்துக்களால் வேறு சொற்கள் எழுது :—

குதிரை—சிகரம்— வைக்கோல்—நாகரிகம் — இமைப்புளி—பட்டினி

4. எது எதற்குப் பொருள்?

| | |
|---|---|
| தொழில் | செல்வர் |
| அழைத்து | ஆகாரம் |
| பரிசு | மேன்மையானது |
| தனவந்தர் | பாத்திரங்கள் |
| உணவு | ஆசிரியர் |
| சிறந்தது | வெகுமதி |
| பாண்டங்கள் | தருவித்து |
| உபாத்தியாயர் | வேலை |



# 27. கைத்தொழில்கள்

(பாட்டு)

கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள் ;
கவலை உனக்கில்லை ஒத்துக்கொள் ;
எத்தொழில் ஒன்றும் தெரியாமல்
இருந்திடல் உனக்கே சரியாமோ ? 1

உழவும் தொழிலும் இல்லாமல்
உலகில் ஒன்றும் செல்லாது.
விழவும் கலையும் விருதுகளும்
வேறுள இன்பமும் இருந்திடுமோ ? 2

நெசவுக் காரர்கள் நெய்யாமல்
நிலத்தவர் உடைக்கென் செய்வார்கள்?
குசவன் செய்திடும் பாண்டமன்றோ
குடித்தனம் நடத்திட வேண்டுமென்றும்? 3

கைத்தொழில் தம்மைக் காத்திடுவோம் ;
கலகம் பற்பல தீர்த்திடுவோம் ;
பொய்த்தொழில் யாவும் குறைந்திடவே
பூமியில் நாமே சிறந்திடுவோம் ! 4

—நாமக்கல் கவிஞர்





# 28. புகை வண்டி நிலையம்

1. புகை வண்டித் தொடரை நீ பார்த்திருப்பாய். வண்டிகள் சில ஒன்றோடொன்று சேர்ந்து தொடர்ச்சியாய் இருப்பதால், இதைத் ‘**தொடர்**’ என்று வழங்குகிறோம். இத்தொடரை இழுத்துச் செல்லும் இயந்திரத்திற்கு இங்கிலீஷில் ‘**இஞ்சின்**’ என்பது பெயர். இஞ்சினிலிருந்து புகை வெளிப்படுவதால், இதைப் ‘**புகை வண்டி**’ என்று வழங்குகிறோம்.

2. புகை வண்டித் தொடர் தரையில் செல்லாது; தண்டவாளத்தின்மேல் செல்லும். தண்டவாள அமைப்புக்கு ‘**இருப்புப்பாதை**’ என்பது பெயர்.

3. புகை வண்டித் தொடர் நிற்கும் இடத்துக்குப் ‘**புகை வண்டி நிலையம்**’ என்பது பெயர். இதை இங்கிலீஷில் ‘**ரெயில்வே ஸ்டேஷன்**’ என்று

சொல்லுகிறோம். படத்தைப் பார். புகை வண்டி நிற்கும் இடத்தில் இரண்டு பக்கங்களிலும் மேடைகள் கட்டப்பட்டிருக்கும். அம்மேடைகள் இங்கிலீஷில் '**பிளாட்பாரம்**' எனப்படும். அவை இரயில் வண்டியில் அமைத்துள்ள ஏறு படியளவு உயர்ந்திருக்கும்.

4. புகை வண்டியில் ஏறிச் செல்ல விரும்புகிறவர், தாம் செல்லும் ஊருக்குப் பிரயாணச் சீட்டு வாங்க வேண்டும். இச்சீட்டுக்கு இங்கிலீஷில் '**டிக்கட்டு**' என்பது பெயர். டிக்கட்டில், பிரயாணம் செய்பவர் எந்த ஊரிலிருந்து எந்த ஊருக்குச் செல்கிறரோ, அந்த ஊர்களின் பெயர்கள் அச்சிட்டிருக்கும்; அந்த ஊர்களுக்கு இடைப்பட்ட தூரம் எத்தனை மைல் என்பதும் குறித்திருக்கும்; அந்தத் தொலைவுக்கு உரிய கட்டணத் தொகையும், பிரயாணச் சீட்டின் எண்ணும் காணப்படும்; தேதியும் குத்தப்படும்.

5. டிக்கட்டு விற்பதற்குத் தனி அறை இருக்கும். அதில் டிக்கட்டு விற்பவர் இருப்பார். ஜன்னலின் வழியே நாம் போகும் ஊரின் பெயரைச் சொல்லிப் பணத்தைக் கொடுத்தால், அவர் டிக்கட்டுத் தருவார். அதை வழியில் டிக்கட்டுத் தணிக்கை செய்பவர் கேட்டால், காட்ட வேண்டும். டிக்கட்டு வாங்கும் போது ஒருவரையொருவர் தள்ளாமல், வரிசையாய் நின்று வாங்க வேண்டும். ஒருவரை யொருவர் நெருக்கித்தள்ளுவதால், கள்வர் சட்டைப் பையில் இருக்கும் பொருள்களைத் திருடக்கூடும். வரிசையாய்ச் சென்று வாங்குவதால், இத்தொல்லை நேராது. டிக்கட்டு விற்கும் இடம் இங்கிலீஷில் '**புக்கிங் ஆபீஸ்**' எனப்படும்.

6. பிரயாணம் செய்பவர் பளுவான மூட்டைகளை வைத்திருந்தால், அவற்றுக்கும் கட்டணம் செலுத்திச் சீட்டு வாங்க வேண்டும். மூட்டைகளை எடை போட்டு, அவற்றுக்குச் சீட்டு வழங்கத் தனி அறை உண்டு. அதற்கு இங்கிலீஷில் '**பார்சல் ஆபீஸ்**' என்பது பெயர்.

7. நிலையத்து மேடையில் வண்டி வந்து நின்றதும் பிரயாணிகள் ஒருவரையொருவர் தள்ளிக் கொண்டு வண்டியில் ஏறுவதை நாம் காணலாம். இது நல்லதன்று. முதலில் வண்டியில் உள்ளவர் இறங்க வழி விடவேண்டும்; இறங்கியபின் ஏறுபவர் ஒருவர் பின் ஒருவராக ஏற வேண்டும்.

8. பெரிய புகைவண்டி நிலையங்களில் சிற்றுண்டிச் சாலைகள் இருக்கும். சிற்றுண்டிகள், வெற்றிலை பாக்கு, சுருட்டு, சிகரெட்டு, பத்திரிகை முதலியவற்றை விற்பவர்கள் கூச்சலிட்டு விற்பதும், பிரயாணிகள் இரைவதும் பெருங்கூச்சலாய் இருக்கும்.

9. மணி அடித்தால், வண்டி புறப்படும். பிரயாணிகள் எல்லாரும் வண்டியில் ஏறிவிட்டனரா என்பதைக் கவனித்து வண்டிக்குப் புறப்பட உத்தரவு இடுபவர் '**கார்டு**' என்னும் அதிகாரி. அவர் பகலில் பச்சைக்கொடி காட்டியும், இரவில் பச்சை விளக்குக் காட்டியும் தமது உத்தரவைத் தெரிவிப்பதுடன் ஊது குழலையும் ஊதுவார்.

10. புகை வண்டி நிலையத்தின் அதிகாரிக்கு '**ஸ்டேஷன் மாஸ்டர்**' என்பது பெயர். அவர் உத்தரவின்படியே புகைவண்டி நிலையத்து வேலைகள் நடக்கும்.

பயிற்சி:

1. **விடை எழுது :—**

அ. 'புகை வண்டித் தொடர்' என்று பெயர் வழங்கக் காரணம் என்ன ?

ஆ. 'புகை வண்டி' என்னும் பெயர் வழங்கக் காரணம் யாது?

இ. புகை வண்டி செல்லும் பாதைக்கு என்ன பெயர் ?

ஈ. புகை வண்டி நிலயத்தில் டிக்கட்டு வாங்கும் போது நாம் அனுசரிக்க வேண்டிய முறை என்ன ?

உ. 'டிக்கட்டுக்'களில் என்னென்ன குறிப்புக்கள் அச்சிடப்பட்டிருக்கும் ?

ஊ. புகை வண்டியைக் கவனிக்கும் அதிகாரி யார் ?

எ. புகை வண்டி நிலயத்தின் அதிகாரி யார் ?

2. **இவற்றைத் தெரிந்துகொள் :—**

தம்பி நேற்று **வந்தான்.**—இதில் 'வந்தான்' என்பது வினைச்சொல். இது தொழில் முன்பே **நடந்துவிட்டதைக்** குறிக்கிறது. இது **இறந்த கால வினை.**

தங்கை **படிக்கிருள்.**—இதில் 'படிக்கிருள்' என்பது வினைச் சொல். இவ்வினை **இப்போது** நிகழ்(நடைபெறு)கிறது. இது **நிகழ்கால வினை.**

நான் **போவேன்.**—இதில் 'போவேன்' என்பது வினைச் சொல். இவ்வினை **இனிமேல்** நடைபெறப் போவது. இது **எதிர்கால வினை.**

**இதை மனப்பாடம் செய் :**

**வினைச்சொற்கள் காலம் காட்டும். இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் எனக் காலம் மூன்று.**



# 29. பனி நாட்டு மக்கள்

1. பனிக்கட்டியை நீ பார்த்திருக்கிறாய் அல்லவா? பனிக் கட்டியை '**ஐஸ்**' என்று வழங்குகிறோம். ஐஸ் துண்டைக் கையில் எடுத்தால், அதன் குளிர்ச்சியைத் தாங்க முடியாமல் கீழே போட்டுவிடுகிறோம். இவ்வளவு குளிர்ச்சியான பனிக்கட்டியாலேயே வீடுகளைக் கட்டி, அவற்றில் வசிப்பது எப்படி இருக்கும்? உலகில் பனிக்கட்டி வீடுகள் உள்ள நாடுகள் சில உள்ளன. அவற்றைப்பற்றி இப்பாடத்தில் படிப்போம்:

2. நாம் வசிக்கும் பூமி உருண்டை வடிவமானது. இதன் வடகோடியிலும், தென்கோடியிலும் பனி நாடுகள் உள்ளன. அவற்றுள் ஒன்று, **எஸ்கிமோ நாடு**; மற்றொன்று, **லாப்லாந்து**. எஸ்கிமோ நாடு வடஅமெரிக்காக் கண்டத்தின் வட கோடியில் இருக்கிறது. லாப்லாந்து, ஐரோப்பாக் கண்டத்தின் வடபகுதியில் இருக்கிறது.

3. இந்நாடுகள் குளிர் மிகுந்தவை. குளிர் காலத்தில் நிலம் பனிக்கட்டியால் மூடப்பட்டிருக்கும். அக்காலத்தில் இங்குச் சூரியனே உதிக்காது; எங்கும் இருள் சூழ்ந்து இருக்கும். கோடை காலத்-

தில் சூரியன் மறையாது; நாள் முழுவதும் சூரியனைப் பார்க்கலாம்.

4. பனி நாட்டு மக்களின் உடைகள் விநோதமானவை. அவை உரோமத்தோடு கூடிய தோலால் தைக்கப்படும். உடையின் உட்புறம் உரோமமும் வெளிப்புறம் தோலும் இருக்கும். ஆகையால், அந்த உடைகள் கதகதப்பாய் இருக்கும்.

5. பனி நாட்டு மக்கள் வருடம் முழுவதும் ஒரே இடத்தில் வசிக்கமாட்டார்கள்; குளிர்காலத்தில் மேட்டுநிலங்களில் வசிப்பார்கள். அப்போது பனிக்கட்டிகளாலேயே வீடுகளைக் கட்டிக்கொள்வார்கள். அந்த வீடுகளுக்கு 'இக்குளு' என்பது பெயர். அவற்றைப் படத்தில் கவனி. அவற்றின் வாயில் மிகவும் சிறியதாய் இருக்கும். இங்கு வீசும் குளிர்காற்றுக்கும், நடமாடும் காட்டுக் கரடிகளுக்கும் பயந்துதான் இவ்வளவு சிறிய வாயிலை அமைத்து வீடுகளைக் கட்டுகிறார்கள்.



6. பனி வீட்டினுள் ஒரே அறைதான் இருக்கும். அதன் மத்தியில் புகை போக்கி இருக்கும். வீட்டில் எப்போதும் விளக்கு எரிந்துகொண்டே இருக்கும். சுவர்களிலும், கூரையிலும், வாயிலிலும் தோல் பொருத்தப்படும். ஆதலால், உள்ளே குளிர் என்பதே தெரியாது.

7. கோடை காலத்தில் நிலத்தையும் நீரையும் மூடியிருக்கும் பனிக்கட்டி உருகும். அப்போது அம்மக்கள் தங்கள் பனி வீடுகளை விட்டுத் தாழ்ந்த நிலங்களை அடைந்து, அங்குத் தோலால் கூடாரங்களை அமைத்துக்கொண்டு வாழ்வார்கள். அக் கூடாரங்களுக்கு '**டியூபெக்கு**' என்பது பெயர்.

8. பனி நாடுகளில் மரம் செடிகள் வளர மாட்டா; சில பாசி வகைகளே பயிராகும். ஆதலால், பனி நாட்டு மக்கள் விலங்குகளின் மாமிசத்தையும் மீனையுமே தின்று வாழ்கிறார்கள். இந்நாடுகளில் **ஸீல், வால்ரஸ்** என்னும் கடற்பிராணிகள் அதிகம். அவற்றைப் பிடிப்பதும், கரடிகளை வேட்டையாடுவதும் அவர்கள் தொழில்கள். வேட்டையாடப்படும் பிராணிகளின் மாமிசம், உணவாகிறது; தோல், உடையாகிறது; கொழுப்பு, விளக்கெரிக்க உதவுகிறது.



9. பனி நாட்டு மக்கள் இடம் விட்டு இடம் செல்லச் சறுக்கு வண்டிகளை உபயோகிக்கிறார்கள். அவற்றுக்குச் சக்கரங்கள் இல்லை. '**ஸ்லெட்ஜ்**' என்பது அவற்றின் பெயர். அந்த வண்டிகளில் எஸ்கிமோக்கள் நாய்களைப் பூட்டி ஓட்டுகிறார்கள்; லாப்லாந்தியர் '**ரெயின் டீர்**' என்னும் மான்களைக் கட்டி ஓட்டுகிறார்கள்.

10. பனி நாடுகளில் உள்ள மக்கள் வாழ்க்கை அந்நாடுகளுக்குத் தக்கபடி இருக்கிறது. அம்மக்க-ளுள் ஆண்கள், மீன்களை ஈட்டியால் குத்தவும், விலங்குகள்மேல் அம்பு எய்யவும், படகு ஓட்டவும் கற்றுக்கொள்கிறார்கள்; பெண்கள், சமையல் செய்-யவும், தோல் உடைகள் தைக்கவும் கற்றுக்கொள் கிறார்கள். இக்காலத்தில் அம்மக்களும் கல்வி முத-லியவற்றில் முன்னேறி வருகிறார்கள்.

## பயிற்சி :

**1. விடை எழுது :—**

அ. எஸ்கிமோக்கள் எங்கு வசிக்கிறார்கள்?

ஆ. லாப்லாந்து எங்கே இருக்கிறது?

இ. பனி நாட்டு மக்களின் உடை எதனால் ஆனது?

ஈ. 'இக்குளு' என்பது என்ன? அதன் அமைப்பு எப்படி இருக்கும்?

உ. 'டியூபெக்கு' என்பது யாது?

ஊ. 'ஸ்லெட்ஜ்' என்பது யாது? அதன் உபயோகம் என்ன?

எ. பனி நாட்டு மக்களின் தொழில்கள் யாவை?

ஏ. பனி நாடுகளில் வாழும் பிராணிகள் யாவை?

**2. இதைத் தெரிந்துகொள் :—**

மணி சாப்பிட்டான்.—இவ்வாக்கியம் '**உண்டு**' என்னும் பொருளில் அமைந்திருக்கிறது.

மணி சாப்பிடவில்லை.—இவ்வாக்கியம் '**இல்லை**' என்னும் பொருளில் அமைந்திருக்கிறது.

**இம்மாதிரி ஒவ்வொரு வாக்கியத்தையும், உண்டு அல்லது இல்லை என்னும் பொருள்பட எழுதலாம்.**

3. கீழ் வரும் வாக்கியங்களை இல்லை என்னும் பொருள்பட மாற்று :—

அ. பனிக்கட்டியை நீ பார்த்திருக்கிறாய்.

ஆ. பனி வீட்டில் வசிக்கிறார்கள்.

இ. லாப்லாந்து ஐரோப்பாக் கண்டத்தில் இருக்கிறது.

ஈ. லாப்லாந்தில் ரெயின் டீர் என்னும் மான் உண்டு.

4. எதிர்ப்பதங்கள் எழுது :—

குளிர்ச்சி ×, மறையாது ×
தாங்க முடியாது ×, உட்புறம் ×
உதிக்காது ×, தாழ்ந்த ×

5. எது எதற்குப் பொருந்தும் ?

| | |
|---|---|
| பனிக்கட்டி | குளிர் காலத்தில் சூரியன் உதிக்காது. |
| பனி நாடுகள் சில | சூரிரியன் மறையாது. |
| பூமி | பனிக்கட்டி வீடுகள். |
| லாப்லாந்து | கரடிகள் அதிகம். |
| லாப்லாந்தில் | சக்கரமில்லாத வண்டி. |
| கோடைகாலத்தில் | ஐரோப்பாவில் இருக்கிறது. |
| இக்குளுக்கள் | உருண்டை வடிவமானது. |
| பனிநாடுகளில் | உலகில் இருக்கின்றன. |
| ஸ்லெட்ஜ் என்பது | மிகவும் குளிர்ச்சியானது. |

6. கீழ் வரும் அட்டவணையை முடித்துக் காட்டு :—

| தொழில் | தொழிலாளி |
|---|---|
| விவசாயம் | விவசாயி |
| வேளாண்மை | |
| மரவேலை | |
| இரும்பு வேலை | |
| கட்டட வேலை | |
| ஆடு மாடு மேய்த்தல் | |
| நெசவு | |

# 30. கதைப் படம்

குறிப்பு:—படத்தைப் பார்த்துக் கதையைச் சொல்லச் செய்தல்:






# 31. பாலனும் பாலும்

(உரையாடல்)

[பாலன் என்பவன் மூன்றாம் வகுப்பில் படிப்பவன். அவன் தாயார் தினந்தோறும் அவனுக்குப் பசுவின் பாலைக் காய்ச்சிக் கொடுப்பது வழக்கம். ஒருநாள் பாலன் பாலைக் குடிக்க முயன்ற போது, பால் அவனைப் பார்த்துப் பேசத் தொடங்கியது:]

**பால்:** தம்பீ, நீ தினந்தோறும் என்னைக் குடிக்கிறாய்; ஆனால், என்னைப்பற்றி ஏதேனும் அறிவாயா?

**பாலன்:** பாலே, நீ சொல்வது உண்மையே. உன்னைப்பற்றி இன்று அறிந்துகொள்ள விரும்புகிறேன். நீ எங்கிருந்து வந்தாய்?

**பால்:** நான் பசுவினிடமிருந்து வந்தேன். பசு நல்ல தீனி தின்னாவிட்டால், அதன் மடியில் பால் சுரக்காது; பால் அதிகம் சுரப்பதற்குத்தான் மனிதர் பசுவுக்குப் பிண்ணாக்கு முதலிய தீனிகளை வைக்கின்றனர்.

**பாலன்:** நான் உன்னைக் குடித்த பிறகு நீ என்ன ஆவாய்?

**பால்:** நான் உன் உடலினுள் சென்று இரத்தமாக மாறுவேன். அப்போது உனக்கு நல்ல ஆரோக்-

கியம் உண்டாகும். அப்போது நீ மகிழ்ச்சி-யாய் இருப்பாய்.

**பாலன் :** அப்படியா செய்தி? இது வரையில் இதை நான் அறியவில்லை. இதோ உன்னைக் குடித்து மகிழ்கிறேன்!

**[பாலைக் குடிக்கிறான்.]**

## பயிற்சி :

**1. விடை எழுது :—**

அ. பசு அதிகமாகப் பால் தர வேண்டுமானால், அதற்கு என்ன தீனி வைக்க வேண்டும்?

ஆ. நாம் பாலைக் குடிப்பதால் ஏற்படும் நன்மைகள் யாவை?

**2. எதிர்ச்சொற்கள் எழுது :—**

| | |
|---|---|
| தாயார் × | மாறுவேன் × |
| அறியேன் × | உண்பேன் × |

**3. கீழ் வரும் வாக்கியங்களில் உள்ள பெயர்ச்சொற்களை-யும் வினைச்சொற்களையும் எடுத்து எழுது:—**

அ. பாலன் மூன்றாம் வகுப்பில் படிப்பவன்.

ஆ. அச்சிறுவன் தினந்தோறும் பால் குடிப்பான்.

இ. நீ என்ன ஆவாய்?

ஈ. நான் உனது உடலில் இரத்தம் ஆவேன்.

| பெயர்ச் சொற்கள் | வினைச் சொற்கள் |
|---|---|
| | |



## 32. நல்ல தீர்ப்பு

1. **கமலாபுரம்** என்பது ஒரு சிறு பட்டணம். அதில் குதிரை வண்டிக்காரர் இருவர் இருந்தனர். ஒருவன் பெயர் **தருமபுத்தி**; மற்றவன் பெயர் **துஷ்டபுத்தி**. ஒரு நாள் இரவு துஷ்டபுத்தி தருமபுத்தியின் குதிரையைத் திருடிக்கொண்டு போய்விட்டான்; குதிரை அடையாளம் தெரியாமல் இருக்க, அதன் வாலைக் கத்தரித்துவிட்டான்.

2. மறு நாள் காலையில் தருமபுத்தி தனது குதிரையைத் தேடிப் பார்த்தான்; குதிரை அண்டை வீட்டுக்காரனை துஷ்டபுத்தியின் இலாயத்தில் இருக்கக்கண்டான்; அவனைக் கண்டு தன் குதிரையைத் தரும்படி கேட்டான்.

3. துஷ்டபுத்தி மிகவும் வஞ்சகன். அவன் தருமபுத்தியைப் பார்த்து, "ஐயா, எனது இலாயத்தில் இருப்பது எனது குதிரை. உமக்குக் கண்

குருடோ ? எனது குதிரையை உம்முடையது என்று வாய் கூசாமல் சொல்கிறீரே!'' என்று வஞ்சகமாகப் பேசினுன்.

4. அது கேட்ட தருமபுத்தி, அப்பட்டணத்து நீதிபதியிடம் தனது வழக்கைத் தெரிவித்தான். நீதிபதி துஷ்டபுத்தியையும் குதிரையையும் தருவித்து, வழக்கை விசாரித்தார். துஷ்டபுத்தி, குதிரை தன்னுடையதே என்ருன்.

5. நீதிபதி தருமபுத்தியைப் பார்த்து, “குதிரை உன்னுடையதுதான் என்பதற்குச் சாட்சி உண்டா ?'' என்று கேட்டார். “அண்டை வீட்டுச் செட்டியார் சாட்சி கூறுவார்,'' என்ருன் தருமபுத்தி.

6. உடனே செட்டியார் அழைக்கப்பட்டார். நீதிபதி செட்டியாரைப் பார்த்து, “செட்டியாரே, இந்தக் குதிரை யாருடையது?'' என்ருர். செட்டியார் வாதிக்கும் நண்பர்; பிரதிவாதிக்கும் நண்பர். உண்மையைச் சொன்னுல், துஷ்டபுத்தி கோபிப்பான். உண்மையை மறைத்தால், தருமபுத்தி கோபிப்பான். பாவம்! செட்டியார் என்ன செய்வார் ? சற்று நேரம் யோசித்தார். அவருக்கு ஒரு யோசனை பிறந்தது.

7. நீதிபதி, செட்டியாரை அவசரப்படுத்தினுர். உடனே செட்டியார், “பிரபுவே, முன்னே பார்த்தால் இந்தக் குதிரை தருமபுத்தியின் குதிரைபோல இருக்கிறது ; பின்னே பார்த்தால், துஷ்டபுத்தியின் குதிரை போல இருக்கிறது,'' என்று சொன்னுர். அதைக் கேட்ட எல்லாரும் சிரித்தனர். நீதிபதி எத்தனை தரம் கேட்டாலும் செட்டியார் தாம் சொன்னதையே சொன்னுர்.

8. அதைக் கேட்ட நீதிபதி சற்று யோசித்தார்; செட்டியார் குதிரையின் வாலையே உற்றுக் கவனித்ததை உணர்ந்தார்; உண்மையை அறிந்தார்; "குதிரை தருமபுத்திக்கே சொந்தமானது," என்று தீர்ப்புச் சொன்னார்; துஷ்டபுத்தியை அவன் செய்த திருட்டுக் குற்றத்துக்காகத் தண்டித்தார். அது கண்ட அனைவரும் ஆச்சரியப்பட்டனர்.

### பயிற்சி :

**1 விடை எழுது :—**

அ. தருமபுத்தியின் குதிரையைத் திருடியவன் யார்?

ஆ. குதிரையைத் திருடியவன் அது தன்னுடையது என்று மெய்ப்பிக்க என்ன செய்தான்?

இ. செட்டியார் கூறிய சாட்சி யாது?

ஈ. நீதிபதி உண்மையை எவ்வாறு உணர்ந்தார்?

**2. கீழ் வரும் வாக்கியங்களை உண்டு என்னும் பொருள் தரும் வாக்கியங்களாக்கு :—**

அ. துஷ்டபுத்தி குதிரையைத் திருடவில்லை,

ஆ. குதிரை இலாயத்தில் காணப்படவில்லை.

இ. தருமபுத்தி வழக்குத் தொடுக்கவில்லை.

ஈ. செட்டியார் உண்மையைக் கூறவில்லை.

**3. கீழ் வரும் வாக்கியங்களை இல்லை என்னும் பொருள் தரும்படி மாற்றி எழுது :—**

அ. குதிரை தருமபுத்திக்கு உரியது.

ஆ. செட்டியார் சாட்சி கூறுவார்.

இ. செட்டியார் வாதிக்கு நண்பர்.

ஈ. நீதிபதி உண்மையை உணர்ந்தார்.



## 33. நரியை ஏய்த்த சேவல்

1. ஓர் ஊரில் குடியானவன் ஒருவன் இருந்தான். அவன் ஓர் அழகிய சேவலையும் இரண்டு நாய்களையும் வளர்த்து வந்தான்.

2. குடியானவன் வீட்டிற்குச் சற்றுத் தூரத்தில் செடி கொடிகள் அடர்ந்த ஒரு புதர் இருந்தது. அந்தப் புதரில் ஒரு குள்ளநரி வசித்து வந்தது. அந்த நரி சேவலைப் பிடித்துத் தின்ன ஆவல் கொண்டது.

3. ஒரு நாள் சேவல் குடியானவன் வீட்டின் அருகில் இருந்த மரக்கிளை ஒன்றில் உட்கார்ந்திருந்தது. அதை நரி பார்த்துவிட்டது; வேகமாய் மரத்தின் அருகே சென்றது; 'சேவல் கீழே இறங்கி வரட்டும்,' என்று காத்துக்கொண்டே இருந்தது. நரியைக் கண்ட சேவல் கீழே இறங்கவே இல்லை.

4. நெடுநேரம் காத்துப் பார்த்த பின், நரி, "நண்பரே, வந்தனம்! சுகமாய் இருக்கின்றீரா?" என்று கேட்டது. "நரியாரே, வந்தனம்! சுகந்தான்," என்று கூறியது சேவல்.

5. சேவல் மேலே பேசாமல் இருக்கக் கண்ட நரி, "உமக்கு என்மீது என்ன கோபம்? நீர் கீழே இறங்கி வந்தால் சிறிது நேரம் பேசலாமே!" என்று

கபடமாகப் பேசிற்று. அது கேட்ட சேவல், "எங்கள் குலம் நரிக்குலத்தை நம்புவதே இல்லை. இது உமக்குத் தெரியாதோ?" என்றது.

6. உடனே நரி, "கெட்ட இனத்திலும் நல்லவர் இருப்பர். நான் உம்மை ஒன்றும் செய்ய மாட்டேன். உம்முடைய இறகுகள் வெகு அழகாய் இருக்கின்றன! அருகில் வந்தால் அவற்றைக் கண்டு களிப்பேன்!" என்றது.

7. சேவல் ஒன்றும் பேசாமல் பின்புறம் திரும்பிப் பார்த்தது. அது கண்ட நரி, "அங்கு என்ன பார்க்கிறீர்?" என்று கேட்டது. சேவல், "அங்கு ஒன்றும் விசேஷம் இல்லை. எங்கள் வீட்டு நாய்கள் வருகின்றன. அவற்றைப் பார்த்தேன்," என்று பொய் சொல்லிற்று. 'நாய்கள்' என்ற பெயரைக் கேட்டவுடனே நரி ஓட்டம் பிடித்தது. தந்திரம் வல்ல நரியையும் ஒரு சேவல் தன் தந்திரத்தால் ஏய்த்துவிட்டது.

### பயிற்சி :

**1. விடை எழுது :—**

அ. குடியானவனால் வளர்க்கப்பட்டவை யாவை?

ஆ. நரி சேவலை என்ன செய்ய எண்ணியது?

இ. சேவலைப் பிடிக்க நரி செய்த தந்திரம் என்ன?

ஈ. சேவல் நரியை எவ்வாறு ஏமாற்றியது?

**2. ஒத்த சொற்களைப் பொருத்தி எழுது :—**

| | |
|---|---|
| படிப்பவன் | களவு செய்தான் |
| தினந்தோறும் | அண்டை வீடு |
| அறிந்து | சிந்தித்தார் |
| கூறினது | வாழ்ந்தது |

| | |
|---|---|
| திருடினுன் | சிநேகிதர் |
| அயல் வீடு | சொல்லிற்று |
| யோசித்தார் | தெரிந்தது |
| வசித்தது | ஒவ்வொரு நாளும் |
| நண்பர் | கற்பவன் |

**3. எதிர்ப்பதங்கள் எழுது :—**

| | |
|---|---|
| அறிந்து × | கற்றுவன் × |
| யோக்கியம் × | நண்பன் × |

**4. தகுந்த சொல்லால் கோட்டை நிரப்பு :—**

அ. வீட்டிற்குச் ——— தூரத்தில் புதர் இருந்தது.
(அகன்ற, சிறிது, ஆழ்ந்த)

ஆ. சேவலை நரி ——— சென்றது.
(தின்ற, பார்த்த, கோபமாக, வேகமாக)

இ. நண்பரே ——— இருக்கின்றீரா ?
(கோபமாக, வேகமாக, நலமாக,)

ஈ. உம்முடைய ——— வெகு அழகாய் ———.
(காது, வால், இறகு, போகிறது, இருக்கிறது)



# 34. குறத்தி அருச்சுனனுக்குக் குறி உரைத்தல்

(பாட்டு)

என்றனது திருநாடு கேட்கிருயோ தம்பி !
ஏற்றமுள்ள இந்திரனூர் வாழுமெங்கள் நாடு ;
சந்திரரும் சூரியரும் தவ்ழ்ம்புரியும் நாடு ;
தவமுனிவர் ரிஷிகளெல்லாம் வாழுமெங்கள் நாடு ;
கொச்சிமலே குடகுமலே எங்களது நாடு ;
குமரேசர் வாழ்வதுவும் எங்களது நாடு ;
பச்சைமலே பவழமலே எங்களது நாடு ;
பரமசிவன் வாழ்வதுவும் எங்களது நாடு ;
வங்காளம் சிங்களவம் எங்களது நாடு ;
வளம்பாடிக் குறியுரைக்க வந்தேனடா தம்பி !
ராமக்காள் லட்சுமக்காள் பொம்மக்காள் என்பேர் ;
நலமறிந்து குறியுரைப்பேன் நன்மைபெற நாளும் ;
சந்திரகுல ராஜாக்கள் தருமர்ஐவர் நீங்கள் ;
தரணிமுழு தாளுகின்ற தருமர்தம்பி நீதான்.
சிலே நுதலன் வடிவழகன் தேர்விசயன் நீதான் ;
தீர்த்தயாத் திரைபோகத் தோழனுடன் வந்தாய் ;
வடிவழகு மிக்குடையாள் தென்மதுரை ஆளும்
மகராசி அல்லியைநீ மணக்கமனம் கொண்டாய்.

—அல்லியரசாணி மாலே



# 35. ஆமையும் முயலும்

(நாடகம்)

## காட்சி—1

| | |
|---|---|
| களம் : | ஒரு காட்டின் புல் வெளிப் பகுதி |
| காலம் : | பிற்பகல் |
| பாத்திரங்கள் : | ஆமையும் முயலும் |

[ஒரு காடு—அதன் ஒரு பக்கத்தில் பரந்த புல்வெளி அங்கு ஒரு தடாகம். அதில் வசிக்கும் ஆமை வெயில் காயப் புல் வெளிக்கு வருகிறது. அங்கு ஒரு செடியின் நிழலில் முயல் படுத்திருக்கிறது. ஆமையின் வேகத்தைக் கண்டு முயல் சிரிக்கிறது. அது கேட்டு ஆமை முயலின் அருகில் வருகிறது.]

ஆமை : ஐயா, முயலே, ஏன் என்னைக் கண்டு சிரிக்கிறாய் ? (முயல் மறுபடியும் சிரிக்கிறது.) கேட்டதற்குப் பதில் சொல்லாமல் சிரிக்கிறாயே ?

**முயல்:** ஆமை அண்ணே, கோபித்துக்கொள்ளாதே. நீ நடந்து வரும் வேகத்தைப் பார்த்தால், யாருக்குத்தான் சிரிப்பு வாராது?

**ஆமை:** இதற்கா சிரிக்கிறாய்? ஆண்டவர் படைப்பில் எத்தனையோ விநோதங்கள் உண்டு. அவர் உனக்கு வேகத்தைக் கொடுத்தார்; எனக்கு மந்த நடையைத் தந்தார். ஆனால், எல்லார்க்கும் ஒவ்வொன்று எளிது அல்லவா?

**முயல்:** என்ன ஐயா, பெரிய பிரசங்கம் செய்கிறாய்? உனக்கு எது எளிது? சொல்.

**ஆமை:** கோபிக்காதே தம்பி! சொல்லுவதைப் பொறுமையுடன் கேள்: நீ மிகவும் தற்பெருமை உள்ளவன். உனது ஓட்டத்தைப் பற்றி நீ மிக்க கருவம் அடைகிறாய். சரி, அதையும் பார்த்துவிடலாம் ஓர் ஓட்டப் பந்தயத்தில்.

**முயல்:** (ஆச்சரியப்பட்டு) என்ன! ஓட்டப் பந்தயமா? நீயா என்னோடு பந்தயம் வைத்து ஓடப் போகிறாய்? பேஷ்! (சிரிக்கிறது.)

**ஆமை:** முயலே, சிரிப்பதில் பயன் இல்லை. 'குரைக்கின்ற நாய் வேட்டை பிடிக்காது,' என்பர். நாம் இருவரும் ஓடிப் பார்த்துவிடலாமே!

**முயல்:** உண்மையில் என்னோடு நீ பந்தயம் ஓடப் போகிறாயா?

**ஆமை:** உண்மையல்லாமல் பொய்யா?

**முயல்:** நல்லது! நாம் பந்தயம் ஓடுவதால், தீர்ப்புக் கூற நடுவர் ஒருவர் வேண்டாவா?

**ஆமை:** ஆம்; வேண்டும். சிறிது தூரம் போய்ப் பார்ப்போம். யாராவது வரலாம்.

**முயல்:** சரி; போவோம். (இரண்டும் போகின்றன.)

[திரை]

**காட்சி—2**

| | |
|---|---|
| **களம்:** | ஒரு காட்டின் புல் வெளிப் பகுதி |
| **காலம்:** | பிற்பகல் |
| **பாத்திரங்கள்:** | ஆமை, முயல், நரி |

[ஆமையும் முயலும் பேசிக்கொண்டே மெல்லப் போகின்றன. எதிரில் ஒரு நரி வருகிறது.]

**ஆமை:** முயலே, நாம் அதிருஷ்டசாலிகளே! அதோ நரியார் வருகிறார். அவரை நமது பந்தயத்துக்கு நடுவராக அமர்த்திக்கொள்ளலாம்.

**முயல்:** சரி. இங்கேயே நிற்போம். (நரி அவை இருக்கும் இடத்திற்கு வருகின்றது.)

**ஆமை:** நரியாரே, வந்தனம்!

**முயல்:** நரியாரே, வணக்கம்!

**நரி:** இருவருக்கும் வணக்கம்! நீங்கள் சேர்ந்து இருப்பது ஆச்சரியமாய் இருக்கிறது! என்ன செய்தி?

**ஆமை:** நாங்கள் பந்தயம் ஓட முடிவு செய்திருக்கிறோம். பந்தயத்தின் முடிவை அறிந்து கூற நடுவர் ஒருவரை எதிர்நோக்கி இருந்தோம். நீர் வந்துவிட்டீர். நீரே நடுவராய் இருந்து தீர்ப்புக் கூற வேண்டுகிறோம்.

**முயல்:** நரியாரே, எனது வேண்டுகோளும் அதுவே.

**நரி :** இந்தப் பந்தயம் எனக்குச் சரியெனத் தோன்றவில்லை. சிலர் கோபத்தால் தகாச் செயலில் இறங்குவர். அது போலத்தான் ஆமை இச்செயலில் இறங்கியது. பார்க்கலாம்! 'ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டு ஒன்றாகும்' என்பர் பெரியர். எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்குமோ!

**முயல் :** நரியாரே, ஆமைக்குத்தான் பைத்தியம் பிடித்துவிட்டது என்று எண்ணினேன். உமக்குக்கூடக் கொஞ்சம் பித்தம் இருப்பது போலத் தெரிகிறதே! நீர் பேசுவதைக் கேட்டால் ஆமைக்குக்கூடப் பந்தயத்தில் வெற்றிகிடைக்க வழி இருப்பது போலத் தோன்றுகிறது!

**ஆமை :** முயலே, வீண் பேச்சு எதற்கு? பந்தயத்தைத் தொடங்குவோம்.

**நரி :** சரி. (தரையில் ஒரு கோடு கிழிக்கிறது.) இருவரும் இந்தக் கோட்டின்மீது வந்து நில்லுங்கள். அதோ தூரத்தில் தெரிகிறதே மரம், அந்த மரத்தை முதலில் தொடுபவரே வெற்றி பெற்றவர். நான் ஒன்று, இரண்டு, மூன்று என்பேன். மூன்று என்னும் சொல்லைக் கேட்டவுடனே நீங்கள் ஓடத் தொடங்க வேண்டும். தெரிகிறதா?

**ஆமை, முயல் :** சரி, தெரிகிறது.

**நரி :** கோட்டின்மீது நில்லுங்கள். ஒன்று, —— இரண்டு —— மூன்று. (முயல் பாய்ந்து ஓடுகிறது. ஆமை நகர்கிறது.)

[திரை]

## காட்சி—3

**முயல்:** (தனக்குள்) பாதித் தூரம் வந்துவிட்டோம்! (திரும்பி ஆமையைப் பார்க்கிறது.) நாம் தொட வேண்டிய மரம் இதோ அருகில் தெரிகிறது. ஆமையோ, கண்ணுக்குத் தெரியவில்லை. வெயிலோ, கடுமையாய் இருக்கிறது! ஆமை வருவதற்கு நெடுநேரம் ஆகும். இதற்குள் இச் செடியின் கீழ்ச் சற்று நேரம் நித்திரை செய்து விட்டுப் பிறகு ஓடலாமே! ஆம், அதுதான் நல்லது! (படுத்துத் தூங்குகிறது.)

**ஆமை:** (தனக்குள்) ஹா! எவ்வளவு நேரம் ஆகிறது! இன்னும் பாதித்தூரம் கூட ஆகவில்லையே! வெயிலோ, தாங்க முடியவில்லை! இந்தப் பந்தயத்தில் இறங்கியது முட்டாள்தனம்! இறங்கிய பிறகு என்ன செய்வது! ஓடித்தான் ஆக வேண்டும்!

[பாதை அருகில் செடியின் கீழ்த் தூங்கிக்கொண்டிருக்கும்முயலைப் பார்க்கிறது.]

ஓ! முயல் இதோ தூங்குகிறதே! இந்நேரம் அது பந்தயத்தை முடித்துவிட்டு இருக்கும் என்று எண்ணினேன். நல்ல காலமாக அது இங்கே தூங்குகிறது. தூங்கட்டும்.

[மெல்லச் சென்று மரத்தை அடைகிறது. அதன் பின் முயல் விழித்துக் கொள்கிறது; ஆமை தன்னைக் கடந்து போய்விட்டதை அறிகிறது; பரபரப்பாக ஓடுகிறது. ஆனால், ஆமை பந்தயத்தில் வெற்றி பெற்றுவிட்டது.]

**நரி:** ஐயா, முயலே, பந்தயத்தில் ஆமை வெற்றி பெற்றுவிட்டது! நீ தோற்றுவிட்டாய்! 'ஆனைக்கும் அடி சறுக்கும்,' என்பர் பெரியர்.

அது போல நீ ஓடுவதில் திறமை பெற்றிருந்தும் உனது அலட்சிய புத்தியாலும், சோம்பலா-லும் பந்தயத்தில் தோற்றுவிட்டாய். இதனால், 'எதையும் அலட்சியமாக எண்ணக்கூடாது,' என்னும் உண்மையை நீ அறிந்து நடக்க வேண்-டும். 'முயற்சியால் முடியாதது ஒன்றுமில்லை,' என்பது பெரியார் வாக்கு. அது போல, ஆமை தனது விடா முயற்சியால் வெற்றி பெற்றது. இதையும் நீ மனத்தில் கொள்ள வேண்டும். நான் போய் வருகிறேன். வந்தனம்! (போகிறது.)

**ஆமை:** நரியாரே, உமக்கு எனது நன்றி உரியது! சென்று வாரும். (போகிறது.)

**முயல்:** நரியாரே, நீர் கூறிய நற்புத்திக்கு நன்றி கூறுகிறேன். நான் போய் வருகிறேன். (ஓடு-கிறது.)

[திரை]

**பயிற்சி:**

**1. விடை எழுது :—**

அ. முயல் ஆமையைக் கண்டு ஏன் சிரித்தது?

ஆ. ஆமை முயலை ஏன் பந்தயத்துக்கு அழைத்தது?

இ. முயலும் ஆமையும் யாரை நடுவராய் அமர்த்திக் கொண்டன?

ஈ. முயல் ஏன் தோற்றுவிட்டது?

**2. ஒரே பொருள் உள்ள சொற்களை இணைத்தெழுது :—**

| | |
|---|---|
| பரந்த | நகைப்பு |
| தடாகம் | கடவுள் |
| சிரிப்பு | குளம் |
| ஆண்டவர் | விசாலமான |

# செய்யுட்பாடங்கள்

## 1. பாண்டி நாடு

தேன்பெருகும் சோலைத் தென்னன் வளநாடு!
கனியுதிரும் சோலைக் கனமதுரை நன்னாடு!
வாழை வடக்கினும்; வான்கமுகு மேற்கினும்;
கரும்பும் இளநீரும் கண்திறந்து மடைபாயும்;
கட்டுக் கலம்காணும் கதிர்உழக்கு நெல்காணும்:
அரிதாள் அறுத்துவர மறுநாள் பயிராகும்;
அரிதாளின் கீழாக ஐங்கலத்தேன் கூடுகட்டும்;
மாடுகட்டிப் போர்அடித்தால் மாளாது செந்நெல்என்று
ஆனைகட்டிப் போர்அடிக்கும் அழகான தென்மதுரை.

—அல்லியரசாணி மாலை

## 2. பெற்றோரை வணங்கல்

உற்றவ ரேஎன்னைப் பெற்றவ ரே! தினம்
உமக்கே நமஸ்காரம்!
முற்றுமே நீர்செய்த உதவிக்கு நான்என்ன
மொழிவேன் உபசாரம்! 1

பாலும் சோறும் பட்சணம் எனக்கிட்டுப்
பழஞ்சோ றுண்டீரே!
காலமெல் லாம்நல்ல சோமன்நான் உடுக்கநீர்
கந்தையைக் கொண்டீரே! 2

மண்பிள்ளை யாயினும் தன்பிள்ளை என்றெனை
மகிழ்ந்தா தரித்தீரே!
பண்புடன் என்பொருட் டாகநீர் பலரையும்
பணிந்துப சரித்தீரே! 3

தெரியாமல் நான்செய்த பிழைபொறுத் தென்னிடம்
திருவருள் பதிப்பீரே!
அருவேத நாயகன் அருள்செய்யும் படியென்னை
ஆசீர் வதிப்பீரே! 4

—வேதநாயகம் பிள்ளை

# 3. கொன்றை வேந்தன்

1. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
2. ஆலயம் தொழுவது சாலவும் நன்று.
3. இல்லறம் அல்லது நல்லறம் அன்று.
4. ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.
5. உண்டி சுருங்குதல் பெண்டிர்க்(கு) அழகு.
6. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.
7. எண்ணும் எழுத்தும் கண்எனத் தகும்.
8. ஏவா மக்கள் மூவா மருந்து.
9. ஐயம் புகினும் செய்வன செய்.
10. ஒருவனைப் பற்றி ஓர்அகத்(து) இரு.
11. ஓதலின் நன்றே வேதியர்க்(கு) ஒழுக்கம்.
12. ஒளவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு.
13. கிட்டா தாயின் வெட்டென மற.
14. கீழோர் ஆயினும் தாழ உரை.
15. குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை.
16. கெடுவது செய்யின் விடுவது கருமம்.
17. கைப்பொருள் தன்னில் மெய்ப்பொருள் கல்வி.
18. சீரைத் தேடின் ஏரைத் தேடு.
19. சூதும் வாதும் வேதனை செய்யும்.
20. சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்.
21. தந்தைசொல் மிக்க மந்திரம் இல்லை.
22. தாயிற் சிறந்தொரு கோயிலும் இல்லை.
23. திரைகடல் ஓடியும் திரவியம் தேடு.
24. தீராக் கோபம் போரா முடியும்.
25. தேடா(து) அழிக்கின் பாடா முடியும்.
26. தையும் மாசியும் வையகத்(து) உறங்கு.
27. தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது.
28. நல்லிணக்கம் அல்ல(து) அல்லல் படுத்தும்.
29. நாடெங்கும் வாழக் கேடொன்றும் இல்லை.
30. நுண்ணிய கருமமும் எண்ணித் துணி.

—ஒளவையார்

# 4. நறுந்தொகை

1. எழுத்தறி வித்தவன் இறைவன் ஆகும்.
2. கல்விக் கழகு கசடற மொழிதல்.
3. செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்.
4 வைசியர்க் கழகு வளர்பொருள் ஈட்டல்.
5. உழவர்க் கழ(கு)ஏர் உழுதூண் விரும்பல்.
6. உண்டிக் கழகு விருந்தோ(டு) உண்டல்.
7. பெண்டிர்க் கழ(கு)எதிர் பேசா(து) இருத்தல்.
8. குலமகட்(கு) அழகுதன் கொழுநனைப் பேணுதல்.
9. கற்கை நன்றே! கற்கை நன்றே!
பிச்சை புகினும் கற்கை நன்றே!
10. கல்லா ஒருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுள் பிறந்த பதரா கும்மே!
11. எக்குடிப் பிறப்பினும், யாவரே யாயினும்,
அக்குடிக் கற்றோரை 'மேல்வருக!' என்பர்.
12. அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும்.
13 குடைநிழல் இருந்து குஞ்சரம் ஊர்ந்தோர்,
நடைமெலிந் தோரூர் நண்ணினும் நண்ணுவர்.
14. சிறப்பும் செல்வமும் பெருமையும் உடையோர்,
அறக்கூழ்ச் சாலை அடையினும் அடைவர்.
15. அறத்திடு பிச்சை கூவி இரப்போர்,
அரசோ(டு) இருந்தர(சு) ஆளினும் ஆளுவர்.
16 குன்றத் தனையிரு நிதியைப் படைத்தோர்,
அன்றைப் பகலே அழியினும் அழிவர்.
17. முதலுள பண்டம் கொண்டுவா ணிகம்செய்(து),
அதன்பயன் உண்ணு வணிகரும் பதரே.
18. வித்தும் ஏரும் உள்வா யிருப்ப,
எய்த்தங் கிருக்கும் ஏழையும் பதரே.
19. தன்ஆ யுதமும் தன்கையிற் பொருளும்
பிறன்கையிற் கொடுக்கும் பேதையும் பதரே.
20. துணையோ டல்லது நெடுவழி போகேல்.

—அதிவீரராம பாண்டியர்

# புதுச் சொற்கள்

அடுக்கு
அலங்கரி
அமைப்பு
அத்தர்
அனல்
அளி
அணி
அழி
அடை
அகவுதல்
அலகு
அசைந்து
அருவருப்பு
அதிகாரி
அடங்கு
அலுவல்
அபராதம்
அரசாங்கம்
அளவு
அலுவலாளர்
அமர்ந்து
அரும்பு
அம்புலி
அடைகாத்தல்
அயல்
அசுத்தம்
அவசியம்
அயோக்கியர்
அறுவடை
அறிவாள்
அகன்று
அருகு
அவசியம்
அச்சிடு
அம்பு
அடையாளம்

அண்டை
அவசரம்
அல்லி
அரசாணி
அண்ணன்
அதிருஷ்டம்
அலட்சியம்
அரிதாள்
அருள்
அன்னை
அகத்து
அல்லல்
அறக்கூழ்
ஆரோக்கியம்
ஆவல்
ஆளும்
ஆண்டவர்
ஆறுதல்
ஆணி
ஆசிரியர்
ஆபீஸ்
ஆஸ்தானம்
ஆத்திரம்
ஆட்டம்
ஆலோசனை
ஆண்டு
ஆங்கிலம்
ஆழி
ஆக்கி
ஆதிக்கம்
ஆணவம்
ஆதி
ஆகாயவிமானம்
ஆசீர்வதி
ஆலயம்
ஆக்கம்

இரத்தம்
இந்திரனார்
இலாபம்
இருப்பிடம்
இழைப்புளி
இருந்திடல்
இழு
இயந்திரம்
இஞ்சின்
இருப்புப்பாதை
இடைப்பட்ட
இரா
இன்பம்
இதழ்
இறை
இரை
இனம்
இருள்
இறகு
இனிமை
இறப்பு
இன்னார்
இரு
இயக்கம்
இங்கிலிஷ்
இன்னமுது
இலாபம்
இராமாயணம்
இயற்று
இழந்தார்
இறைக்க
இரைச்சல்
இளநீர்
இறைசால்
இல்லறம்
இறப்பார்

ஈகை
ஈன்று
ஈந்து
ஈனும்
ஈயார்
ஈட்டல்
உண்ணுதல்
உண்டிச்சாலை
உழுந்து
உட்கொள்
உராயும்
உருசி
உரல்
உறுப்பு
உதவு
உம்மை
உரை
உணர்
உழவன்
உளி
உபாத்தியாயர்
உத்தரவு
உரோமம்
உட்புறம்
உற்றுக்கவனி
உவந்து
உருவப்படம்
உரியது
உலகு
உதிக்கும்
உப்பளம்
உறுப்பு
உச்சி
உணவு
உதிரும்
உழக்கு
உற்றவர்
உபசாரம்
உண்டி
உறங்கு

உழுதூண்
ஊர்வலம்
ஊதுகுழல்
ஊசி
ஊரார்
ஊர்ந்து
எதிர்க்க
எரி
எண்
எழுத்து
எடை
எய்தல்
எழும்
எண்ணு
எதிர்ப்பாட்டு
எருது
எச்சில்
எள்ளு
எளிது
ஏவா
ஏதும்
ஏற்றம்
ஏமாற்று
ஏறு
ஏய்த்தல்
ஐஸ்
ஐவர்
ஐங்கலம்
ஐயம்
ஒற்றுமை
ஒருமை
ஒத்துக்கொள்
ஓதல்
ஓதுவர்
ஓட்டம்
ஔவியம்
கவிஞர்
கனம்
கமலம்
கலைமகள்

கரைந்தது
கண்டது
கருமை
கணக்கப்பிள்ளை
கசாப்புக்காரன்
கட்டணம்
கடிகாரம்
கணக்கு
கற்றார்
கறி
கடைதல்
கழனி
களைந்து
களைக்கொட்டு
களை எடுத்தல்
கம்பு
கண்டம்
கடப்பாரை
கலை
கல்
கனத்து
களி
கடலை
குறை
கம்பம்
கடுமை
கழுகு
கலம்
கந்தை
கசடற
கற்கை
காவி
காரிருள்
கால்வாய்
காலண்டர்
காலக்குறிப்பு
காரணம்
காறு
கிழமை
கிளறி

கிழோர்
குகை
குடுக்கை
கொல்லன்
குலாலத்தொழில்
குமரேசர்
குடித்தனம்
குழல்
குளிப்பாட்டு
குஞ்சம்
குளம்பு
குருத்தோலை
குங்குமம்
குறுகி
குடகு
குழம்பு
குஞ்சரம்
கூடாரம்
கூரிய
கெட்டி
கேணி
கேழ்வரகு
கைப்பொருள்
கொழுநன்
கொக்கு
கொட்டகை
கொட்டை
கொள்ளு
கோணல்
கோபுரம்
கோடை
கௌதாரி
சறுக்கு
சச்சரவு
சங்கிலி
சம்பளம்
சம்பங்கி
சமஸ்கிருதம்
சக்கரவர்த்தி
சடை

சந்தை
சருகு
சமைத்தல்
சமமானவர்
சாமந்தி
சாதனம்
சால்
சாவி
சாலைகள்
சிற்றுண்டி
சிலை
சிவப்பு
சிறகு
சீலைகள்
சீட்டு
சுண்ணும்பு
சுற்றம்
சுலபம்
சுரத்தல்
சுடர்
சுகாதாரம்
சுற்றுப்புறம்
சுமந்து
சூடு
சூழ்ந்து
செழுங்கிளை
செவ்வாய்
செவி
செவ்வந்திச் செடி
செக்கச் சிவந்து
செங்கதிர்
செந்தாமரை
செம்மறிக்கடா
செருப்பு
சேடை
சேறு
சேவல்
சோளம்
சோமன்
சோடா

ஞாயிறு
டிக்கட்டு
தழை
தச்சத்தொழில்
தண்டவாளம்
தணிக்கை
தரணி
தடாகம்
தருவி
தனம்
தலைகாட்டு
தண்டி
தன்மை
தண்டல்
தலையாரி
தண்டோரா
தவிடு
தாங்கு
தாம்ப்பாள்
திரவியம்
திருவிழா
திருமணம்
திசை
திங்கள்
திகைப்பு
திரண்ட
திணை
திணி
திங்கு
தீற்றுவர்
துதிக்கை
தும்பிக்கை
துன்பம்
துளி
துவரை
தூவுதல்
தூங்கு
தென்னன்
தெரிவி
தேசியம்

தேசம்
தொழுவம்
தொடுத்து
தொன்மை
தொகை
தொடர்
தொல்லை
தோரணம்
தோகை
தோட்டம்
தோப்பு
நடு
நன்மை
நறுமணம்
நனை
நடவு
நன்செய்
நஞ்சை
நட்சத்திரம்
நல்லூர்
நடுவார்
நண்ணுவர்
நாற்றம்
நாழிகை
நிரப்பு
நிலயம்
நிலை
நினைவு
நிரம்பியவை
நிச்சயி
நிலவரி
நிதி
நிறுத்து
நிழல்
நித்திரை
நீதிபதி
நீதி
நீலமேகம்
நுங்கு
நுதல்

நுண்ணிய
நெசவுக்காரர்
நெய்தல்
நெருக்கு
நெடுந்தொலை
நெய்தல்
நெய்
நெடுவழி
நேர்த்தி
பண்பு
பணிந்து
பழமொழி
பழி
பண்டம்
பட்டினி
பறத்தல்
பதுமை
பட்டம்
பன்னீர்
பகுத்தறிவு
பரவை
பன்மை
படர்ந்து
பசுமை
பட்டணம்
பயற்றுவகை
பழம்
பட்சணம்
படியாதவர்
பருத்து
பனஞ்சாறு
பருத்தி
பசை
பரம்புச்சட்டம்
பரம்படித்தல்
பார்சல்
பாசி
பாறை
பாணம்
பிரமோற்சவம்

பிரதிவாதி
பிண்ணாக்கு
பிற்பகல்
பித்தம்
பிரமாணம்
பிளாட்பாரம்
பிராணி
பிளவு
பிரியம்
பிராமணன்
பிண்ணாக்கு
பிரையிடல்
புற்று
புக்கிங்-ஆபீஸ்
புலவர்
புதர்
புளி
புன்செய்
புஞ்சை
புழுதிக்கால்
பூஞ்செடி
பூவாது
பெட்டை
பேணு
பேதை
பொறி
பொருத்து
பொன்னிறம்
பொதி
பொறிக்கும்
பொந்து
பொருந்து
பொத்தான்
போற்று
மந்திரம்
மகிழ்
மந்தம்
மடி
மடை
மட்பாண்டம்

மரப்பட்டை
மதில்
மதம்
மறை
மட்டில்லாத
மஞ்சள்
மணியக்காரர்
மனோரஞ்சிதம்
மன்மதபாணம்
மருவு
மருக்கொழுந்து
மனப்பாடம்
மங்கை
மந்தாரை
மனைவி
மத்து
மண்வெட்டி
மானம்
மாவிலை
மாலை
மாதந்தோறும்
மாமிசம்
மாதம்
மாண்பு
மிதம்
மிதிப்பர்
மின்சாரம்
முனிவர்
முப்பது
முளை
முகந்து
முயற்சி
மூங்கில்
மேவு
மேல்திசை
மேற்கு
மேடை
மொச்சை
மொழி
மொழிவேன்

மோந்து
மேல்நாடு
மோர்
யாகம்
யாத்திரை
யோசி
யோசனை
ரயில்வே
ராஜா
ரிஷபம்
ரிஷி
வளம்
வளர்வது
வண்டித்தொடர்
வடிவம்
வழக்கு
வழக்கம்
வசூல்
வணிகர்
வந்தனை
வயல்
வஞ்ச[illegible]
வட்டம்
வழக்கு
வணக்கம்
வளையல்
வடங்கள்
வணங்கு
வாயில்
வான்
வானவாரி
வாசம்
வானம்
வாரம்
வாட்டம்
வான்கோழி
வாதி
வாகனம்
விரும்பு
விருது

விநோதம்
விழவு
விட்டம்
விற்பவர்
விமானம்
வித்தியாசம்
விலங்கு
விழுங்கு
விளக்குதல்
விரித்து
விதிப்பர்
விசாலம்
வினாடி
வியாழன்
விண்
விதைத்தல்
விவசாயம்
வீதிவலம்
வீழ்வது
வீட்டுக்காரன்
வெப்பம்
வெண்மை
வெட்டியான்
வெள்ளி
வெண்ணெய்
வெற்றிலை
வேக வை
வேறுள
வேட்டை
வேளாளர்
வேற்றுமை
வேதியர்
வேந்தர்
வேதம்
வேதனை
வையத்து
வைசியர்
ஜில்லா
ஜமீந்தார்
ஸ்டேஷன்

147011
TB 031(3) N52